உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

# மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்துக்கு மாதவச்சிவஞான யோகிகள் உரைத்த சிவஞான போத மாபாடியத்துக்கு அருணை வடிவேலு முதலியார் எழுதிய பொருள் நிலை விளக்கத்துக்கு வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் திகழும் கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வழங்கும் தந்துரை

*பதிப்பாசிரியர்*

**டாக்டர் இராச. வசந்தகுமார்**

நிறுவன வேந்தர்

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**


**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்**

**(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)**

ஈச்சனாரி, கோவை - 21.

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்துக்கு மாதவச்சிவஞான யோகிகள் உரைத்த சிவஞான போத மாபாடியத்துக்கு அருணை வடிவேலு முதலியார் எழுதிய பொருள் நிலை விளக்கத்துக்கு வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் திகழும் கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வழங்கும் தந்துரை** |
| மூல நூல் | : | **மெய்கண்டார் அருளிய சிவஞான போதம்** |
| மாபாடிய நூலாசிரியர் | : | **மாதவச் சிவஞான யோகிகள்** |
| பொருள் நிலைவிளக்க உரை நூலாசிரியர் | : | மகாவித்துவான் **சி. அருணைவடிவேலு முதலியார்** |
| நூல் வகை | : | **மெய்கண்ட சாத்திர நூல் (ஞான நூல்)** |
| வெளியீடு | : | **பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**<br>**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)**<br>**கோயம்புத்தூர்.** |
| வெளியீட்டு எண் | : | **69** |
| வெளியிடும் நாள் | : | **28 - 10 - 2018** |
| பக்கங்கள் | : | **960** |
| தாள் | : | மேப்லித்தோ 80 gsm |
| அளவு | : | கிரவுன் 1/8 |
| அச்சகம் | : | **செஞ்சுடர் அச்சகம்**<br>கோ.வா.பாளையம்,<br>போத்தனூர், கோவை – 23.<br>செல் : 98431 74238 |



□

*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்கம்

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கஎண் |
|---|---|---|
| I | **பதிப்புரை** | 9 |
| II | மெய்கண்ட தேவநாயனார் அருள் வரலாறு | 19 |
| III | மெய்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதம் (12 சூத்திரங்கள் - மூலம்) | 20 |
| IV | மாதவச்சிவஞான சுவாமிகள் அருள் வரலாறு | 28 |
| V | 1936ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிவஞானபோத நூலுக்குத் திரு.வி.க. அவர்கள் அருளிய அணிந்துரை | 43 |
| VI | 1942 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மெய்கண்ட சாத்திர நூலுக்கு திரு. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய ஆங்கில அணிந்துரை | 58 |
| VII | மாதவச்சிவஞான சுவாமிகள் அருளிய சிவஞான போத மாபாடியப் பொருள்நிலை விளக்க உரை - தோற்றுவாய் | 61 |
| 1. | சிறப்புப் பாயிரம் விளக்கம், முன்னுரை, பொருள் | 63 |
| 2. | சிறப்புப் பாயிரப்பாடம் - மலர்தலை யுலகின் எனத் துவங்கும் பாயிரம் (பிறரொருவரால் செய்யப்பட்டு நூலின் புறத்தே உள்ளது) | 67 |
| | 2(1) - உரைவகை | 68 |
| | 2(2) - சிறப்புரைப் பொருள் | 71 |
| | 2(3) - காட்சி வகைகள் | 72 |
| | 2(4) - தனுகரண புவன போகம் (உலகின் நாற்கூறுகள்) | 75 |
| | 2(5) - ஆன்மா அவத்தை (நிலைகள்) | 76 |
| | 2(6) - அளவைகள் | 79 |
| | 2(7) - பொது(தடத்த), சிறப்பு(சொரூப) இயல்புகள் | 82 |
| | 2(8) - முறைமைகள் (நியாயங்கள்) | 84 |
| | 2(9) - ஆகமங்களும் உபநிடதங்களும் | 85 |
| | 2(10) - நூலின் அமைப்பு | 87 |

| | | |
|---|---|---|
| | 2(11) - நூலின் சிறந்த நோக்கம் | 90 |
| | 2(12) - நாற்பாதங்கள் | 91 |
| | 2(13) - ஆகமப் பொருள்கள் | 94 |
| | 2(14) - சிவாகமங்களின் வரலாறு | 98 |
| | 2(15) - சிவாகம பேதங்கள் - சதாசிவமூர்த்தம் | 100 |
| | 2(16) - சிவஞானபோதச் சிறப்பு - நிலவுலகில் வந்த வரலாறு | 102 |
| | 2(17) - சித்தாந்த சாத்திரங்கள் | 105 |
| | 2(18) - உயர்சிவஞானபோதம் | 108 |
| | 2(19) - நூலாசிரியரது பெருமை | 110 |
| | 2(20) - சிவஞானபோத நூற்கருத்து | 112 |
| | 2(21) - இலக்கணக் குறிப்புகள் | 113 |
| | 2(22) - தந்துரை - I ஆராய்ச்சியுரைகள் - சைவாகமப் பிரமாணியம் | 116 |
| | 2(23) - தடைகள் | 118 |
| | 2(24) - விடைகள் | 121 |
| | 2(25) - ஒரு சில செய்திகள் | 129 |
| | 2(26) - நீலகண்ட சிவாசாரியார் உரைப்பகுதி | 131 |
| | 2(27) - வேதசிவாகமங்கள் முதல் நூல்கள் என்ற தெளிவு | 136 |
| | 2(28) - தந்துரை - II தீக்கை விளக்கம் | 138 |
| **3.** | **தற்சிறப்புப் பாயிரம் (நூலாசிரியர் தாமே செய்தது)** | 179 |
| | 3(1) - தற்சிறப்புப் பாயிரம் - மங்கல வாழ்த்து முன்னுரை | 179 |
| | 3(2) - தற்சிறப்புப் பாயிரம் - மூலபாடம் | 181 |
| | 3(3) - தற்சிறப்புப் பாயிரம் - விளக்கவுரை | 182 |
| | 3(4) - தற்சிறப்புப் பாயிரம் - சிறப்புரை | 185 |
| | 3(5) - தற்சிறப்புப் பாயிரம் - அவையடக்கம் | 188 |
| | 3(6) - தற்சிறப்புப் பாயிரம் - மூலபாடவெண்பாவும் விளக்கவுரையும் | 189 |

| | | |
|---|---|---|
| | 3(7) - தற்சிறப்புப் பாயிரம் - சமயங்களின் வகை | 197 |
| | 3(8) - தற்சிறப்புப் பாயிரம் - சமயங்களின் கொள்கைச் சுருக்கம்<br>அ) I - புறப்புறச்சமயங்கள் (ஆறுவகை) உலகாயத மதம் | 204 |
| | ஆ) - பௌத்த மதம் (நான்கு வகை) | 208 |
| | இ) - ஆருகதம் (அ) சைனம் (அ) சமணம் | 216 |
| | ஈ) II - புறச்சமயங்கள் (ஆறுவகை) தருக்க மதம் | 219 |
| | உ) - புறச்சமயங்கள் மீமாஞ்சை மதம் | 222 |
| | ஊ) - புறச்சமயங்கள் ஏகான்மவாத மதம் (நான்கு வகை) | 228 |
| | எ) - புறச்சமயங்கள் - சாங்கிய மதம் | 231 |
| | ஏ) - புறச்சமயங்கள் - யோக மதம், பாஞ்சராத்திர மதம் | 235 |
| | ஐ)III - அகப்புறச் சமயங்கள் (ஆறுவகை) - பாசுபத மதம் | 236 |
| | அகப்புறச் சமயங்கள் - மாவிரதமதம், காபாலமதம் | 237 |
| | அகப்புறச் சமயங்கள் - வாம மதம், வைரவ மதம்,<br>ஐக்கிய வாத சைவம் | 238 |
| | ஒ)IV - அகச்சமயங்கள் (ஆறுவகை) | 239 |
| | ஓ) - சுத்த சைவம் | 245 |
| | ஔ) - சித்தாந்த சைவம் (நமது கொள்கை) | 246 |
| 4. | நூல் - பொது அதிகாரம் - **பிரமாண இயல்** | 251 |
| | அ) பிரமாணம் - அளவை - பொருள்களைத் திட்டமாக<br>அளந்து அறிதல் அளவைகள் | 252 |
| | ஆ) வார்த்திகம் பற்றிய விளக்கம் | 275 |
| 5. | **சூத்திர பாடம் - முதல் சூத்திரம், கருத்துரை** | 278 |
| | அ) கருத்துரை விளக்கம் | 279 |
| | ஆ) முதல் அதிகரணம் ''அவன் அவள் அது எனும்<br>அவைமூ வினைமையின்'' | 289 |
| | இ) இரண்டாம் அதிகரணம் - தோற்றிய திதியே; ஒடுங்கி<br>மலத்துளதாம் | 303 |
| | ஈ) மூன்றாம் அதிகரணம் - ''அந்தம் ஆதி' ' | 343 |
| | உ) முதல் சூத்திரத் தடைகளும் விடைகளும் | 354 |
| | ஊ) முதல் சூத்திரத் தொகைப்பொருள் | 356 |

| | | |
|---|---|---|
| | **இரண்டாம் சூத்திரம் - சூத்திரபாடம்** | **360** |
| 6. | அ) முதல் அதிகரணம் - (அவையே தானே ஆய்) | 377 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - (ஆணையின் இருவினையின்) | 402 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - (போக்குவரவு புரிய) | 529 |
| | ஈ) நான்காம் அதிகரணம் - (ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே) | 559 |
| 7. | **மூன்றாம் சூத்திரம் - சூத்திரபாடம்** | **583** |
| | அ) முதல் அதிகரணம் - (ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது) | 589 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - (இனி, எனதுடல் என்றலின் ஆன்மா உளதென்றது) | 593 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - (இனி ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளதென்றது) | 596 |
| | ஈ) நான்காம் அதிகரணம் - (இனி ஒடுக்க மறிதலின் ஆன்மா உளதென்றது) | 599 |
| | உ) ஐந்தாம் அதிகரணம் - "இனிக் கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளதென்றது" | 602 |
| | ஊ) ஆறாம் அதிகரணம் - "இனி உணர்த்த உணர்தலின் ஆன்மா உளதென்றது" | 606 |
| | எ) ஏழாம் அதிகரணம் - "இனி மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா உளதென்றது" | 611 |
| | **இலக்கண இயல்** | |
| 8. | **நான்காம் சூத்திரம் - சூத்திர பாடம்** | 616 |
| | அ) முதல் அதிகரணம் - "அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று" | 619 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - "ஆயினும் சகசமலத்து உணராது அவை சந்தித்து" | 634 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - அஞ்சவத்தை விளக்கம் - "அமைச்சு அரசுஏய்ப்ப நின்று அஞ்சவைத்தத்தே" | 652 |

| | | |
|---|---|---|
| 9. | **ஐந்தாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **676** |
| | அ) முதல் அதிகரணம் - ''விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு அளந்தறிந்து அறியா'' | 679 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - ''தாம்தம் உணர்வின் தமிஅருள்'' | 682 |
| 10. | **ஆறாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **696** |
| | அ) முதல் அதிகரணம் - ''உணர்உரு அசத்தெனின் உணராது இன்மையின்'' | 706 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - ''இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே'' | 716 |
| | **சாதன இயல்** | |
| 11. | **ஏழாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **763** |
| | அ) முதல் அதிகரணம் - ''யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின் சத்தே அறியாது'' | 767 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - ''அசத்து இலது அறியாது'' | 771 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - ''இருதிறன் அறிவுளது இரண்டல ஆன்மா'' | 774 |
| 12. | **எட்டாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **785** |
| | அ) முதல் அதிகரணம் - ''தவத்தினில் உணர்த்த'' | 787 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - ''தம் முதல் குருவுமாய் உணர்த்த'' | 811 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - ''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து'' | 822 |
| | ஈ) நான்காம் அதிகரணம் - ''விட்டு அன்னியம் இன்மையின் அரன்கழல் செலும்'' | 825 |
| 13. | **ஒன்பதாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **835** |
| | அ) முதல் அதிகரணம் - ''ஊனக்கண் பாசம் உணராப்பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடி'' | 840 |

| | | |
|---|---|---|
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - "உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி" | 845 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - "விதி எண்ணும் அஞ்செழுத்தே" | 853 |
| | **பயனியல்** | |
| 14. | **பத்தாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **863** |
| | அ) முதல் அதிகரணம் - "அவனேதானே ஆகிய அந்நெறி ஏகனாகி" | 866 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - "இறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை இன்றே" | 874 |
| 15. | **பதினோராம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **885** |
| | அ) முதல் அதிகரணம் - "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் காட்டிக் காண்டல்" | 892 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - "அயரா அன்பின் அரன்கழல் செலுமே" | 902 |
| 16. | **பன்னிரண்டாம் சூத்திரம் - சூத்திர பாடம்** | **913** |
| | அ) முதல் அதிகரணம் - "செம்மலர் நோன்றாள் சேராலொட்டா அம்மலங்கழீஇ" | 916 |
| | ஆ) இரண்டாம் அதிகரணம் - "அன்பரொடு மரீஇ" | 921 |
| | இ) மூன்றாம் அதிகரணம் - "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரன் எனத்தொழும்" | 925 |
| | ஈ) நான்காம் அதிகரணம் - "வழிபடாமையை ஒழிக" | 930 |
| 17. | **அதிகரண வெண்பா அகர வரிசை** | **940** |
| 18. | **சொற்பொருளகராதி** | **941** |

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

## சைவசித்தாந்த சாத்திர நூல்கள்

**(மெய்கண்ட சாத்திரங்கள்)**

# சிவஞானபோதம்

## வழிபாட்டுக் கருத்தரங்கம்

**28.10.2018–ஞாயிறு, 29.12.2018, 30.12.2018–சனி, ஞாயிறு**
**23.02.2019–சனி**

### மெய்கண்ட தேவ நாயனார் துதி

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர்இ தயகமல முகைக ளெல்லாங்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம்எப்போ தும்போற்றல் செய்வாம்.

**– சிவஞான சித்தியார் பரபக்கம் – குருவணக்கம்.**

## பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். – திருக்குறள் (10)

**1. உயிரின் நோக்கம் / இலட்சியம்** - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

**2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்**

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) ‘‘ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே’’ என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

**3. வகுத்துக்கொண்ட நெறிகள்**

1) சிவபூசை – விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை – திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் – அன்றாட, வாராந்தர, மாதாந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் – நல்விழாப் பொலிவு காணுதல் – காண்பித்தல்.

**"சிவன் கழல் போற்றி நிற்கும் சிந்தையின் நிறைவே செல்வம்" என வாழும் அடியார் பெருமக்களே, வணக்கம்.**

**சிவஞானபோத நூற்சிறப்பு**

சிவஞானபோதம் என்பதற்கு சிவத்தை உணர்கின்ற அறிவைப் போதித்தல் என்பது பொருளாகும். அஃதாவது விளக்குதல் / உறுதிப்படுத்தி உரைத்தல் என்று கொள்ளவேண்டும். இந்நூல் சிவாகமங்களின் பொருளை ஆராய்ந்து நிச்சயித்துரைத்தற்கு உதவுகிறது.

வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்ளுறு நெய் – போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டார்
செய்ததமிழ் நூலின் திறம். – **தனிச்செய்யுள்**

சிவஞானபோதத்தின் பெருமையைத் "திருக்குறள் ஆகிய வேதம் பசு, திருமூலர் திருமந்திரம் ஆகிய ஆகமம் அந்தப் பசுவின் பால்; அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வரின் பாடல்களாகிய திருமுறைகள் அப்பாலின் நறுநெய்; மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் அந்நெய்யின் இனிய சுவையாகும்" என்று பெரியோர்கள் பாராட்டியுள்ளதை மேற்காண் பாடலால் அறியலாம்.

**நூல் வந்த வரலாறு**

சதாசிவ மூர்த்தி வித்தியேசுவரர் எனப்பெயர் பெற்றுள்ள எண்மரில் முதல்வராகிய அனந்ததேவருக்கு 28 ஆகமங்களையும் உபதேசித்தார். அதைக்கேட்ட அனந்ததேவர் தமக்குக் கீழுள்ள உருத்திரர்களில் முதல்வராகிய சீகண்ட உருத்திரருக்கு உபதேசிக்க அவர் நந்திதேவருக்கு உபதேசித்தார்.

சிவஞான உபதேசம் பெற்ற நந்திதேவருக்கு எல்லா ஆகமங்களும் ஒரே மாதிரியான கருத்தைச் சொல்லாமல் சற்று வேறுபாடாக இருப்பதாக ஐயமெழ சீகண்ட ருத்திரர், சரியை முதல் நாற்பதங்களுள் முதல் மூன்று பாதங்களிலும் அனுட்டானம் என்ற சைவாசார முறையே கூறப்படுகின்றது. அம்முறை கற்பத்துக்கு கற்பம் – காலத்துக்கு காலம் மாறலாம். அன்றியும் அவற்றை அநுட்டிப்பவரது தகுதி பற்றியும் வேறுவேறாகக் கூறப்படலாம். அவரவர் அவரவர் ஆசிரியர் தீக்கை செய்தவழி ஆகமங்களைப் பின்பற்றலாம். மற்றவர் மலைவு எய்யவேண்டாம்.

ஒரே குருநாதரிடம் தீக்கை பெற்றிருந்தாலும் நாம் ஒவ்வொருவர் அன்றாடம் செய்யும் சிவபூசைகளில் (சரியை, கிரியை, யோகம்) வேறுபாடுகளைக் காணலாம்.

ஆனால், ஞானபாதப்பொருட்கள் அவ்வகையானவை அன்று. எல்லா ஆகமங்களும் ஞானத்தைப்பற்றி ஒன்றைத்தான் சொல்கின்றன என்றார்.

மேற்கண்ட விளக்கத்தைப் பற்றி நந்திதேவர் தமது மாணாக்கர்களுள் முதல்வரான சனற்குமார முனிவருக்கு உபதேசம் செய்தார். சனற்குமார முனிவர் தமது மாணாக்கரான சத்தியஞானதரிசினிகளுக்குச் சொல்ல அவர்தம் மாணாக்கர் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசிக்க அவர் மெய்கண்டாருக்கு அருளினார். இந்நூல் மண்ணுலகுக்கு வந்த வரலாறு கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது.



சதாசிவ மூர்த்தி
(சிவஞானபோத உபதேசம்)
↓
அனந்த தேவர்
(அட்டவித்தியேசுவரர்களில் ஒருவர்)
↓
சீகண்டருத்திரர்
(உருத்திரதேவர்)
↓
நந்திதேவர்
↓
சனற்குமாரமுனிவர்
↓
சத்தியஞானதரிசினிகள்
↓
பரஞ்சோதி முனிவர்

(நந்திதேவர் முதல் பரஞ்சோதி முனிவர் வரை) அகச்சந்தானக்குரவர்கள் கயிலையில் வாழ்கிறவர்கள்

↓
மெய்கண்டார்
↓
அருள்நந்திசிவம்
↓
மறைஞானசம்பந்தர்
↓
கொற்றவன்குடி உமாபதிசிவம்

(மெய்கண்டார் முதல் உமாபதிசிவம் வரை) புறச்சந்தானக்குரவர்கள் இந்நிலவுலகத்தவர்

**சிவஞானபோதம் யாருக்காக?**

ஞானபாதத்திற்கு முன்னே உள்ளே சரியை, கிரியை, யோக பாதப் பொருள்களை ஆராயும் நூல்களை உணர்ந்த பின்னரே ஞானபாதத்தை ஆராயும் இந்நூலைக் கற்றல் வேண்டும். பள்ளிப்படிப்பை முடித்தவர்களுக்குத்தான் கல்லூரிப்படிப்பு ஏதுவாக இருக்கும்.

சரியா, கிரியா, யோக பாதங்களைப் பற்றிய அளவான அறிவினொடு ஞானிகளின் பிரமாண நூல்களை / பத்ததிகளைக் கற்றதோடு அமையாது அவற்றின்படி ஒழுகி, ஓதி, வீடு காதலிப்பவர்க்கு – அந்நூல்கள் வழியாக முத்தி அடைய விரும்பும் ஒழுக்க சீலர்களுக்கு – **சிவபெருமானின் செந்தாமரை மலரையொத்த திருவடிகளை அடையும் முறைமையை இந்த நூல் எடுத்தோதும். இதுவே நூற்பயனாகும்.**

முற்பிறவிகளிலே சரியை, கிரியை, யோகம் என்ற முப்பதங்களைப் பற்றிய நூலறிவும், ஒழுக்கமும் பெற்று அறிவு முதிர்ந்தமையாலே இப்பிறப்பின் தொடக்கத்திலேயே ஞானவேட்கை உடையோராய் இருப்போரும் சிலர் உளர். அவர்கள் சாமுசித்தர் எனப்படுவர். அவர்கள் சரியா நூல்களை கற்றுணர வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் கருவிலே திருவுடையவர்கள். ஆனால் மலவாசனை மீண்டும் தாக்காதிருக்க அவர்களும் சரியை, கிரியை, யோக பாதங்களில் ஒழுகவேண்டும்.

மக்களில் மூன்று வகையார் உள்ளனர்.

1) **பிராகிருதர் –** அவர்கள் உலகியலிலேயே அழுந்திக் கிடப்பவர்கள். ஞானவேட்கை இல்லாதவர்கள். அவர்களுக்கு இந்நூல் தேவையில்லை.

2) **வைநயிகர் –** ஓரளவு பக்குவம் அடைந்தவர்கள் வீடுபேற்றைப் பற்றி அறிந்தவர்கள், சரியை முதலிய ஆராய்ச்சி நூல்களை இப்பிறவியில் கற்றிருக்கவேண்டும். அதன்படி ஒழுகிக் கொண்டிருந்தால் அவர்கள் இந்நூலைப் படிக்கலாம்.

3) **சாமுசித்தர் –** இந்த உடம்பினோடு முற்பிறவியிலேயே முப்பத நூல்களைப் படித்து முடித்து இப்பிறவியிலேயே ஞானம், வீடுபேற்றிற்கு தயாராக உள்ளவர்கள். அவர்கள் சரியா நூல்கள் படிக்காமல் ஆனால் அப்பாதங்களில் ஒழுகிக்கொண்டு இந்நூல் மூலம் ஞானம் அடையலாம்.

**நூல் சிறப்பு**

சிவஞான போதம் என்னும் நூல் சித்தாந்தத்தின் தலை மணிநூல் என்பதை நாம் அறியவேண்டும். பன்னிரண்டே நூற்பாக்களில் (சூத்திரங்களில்) 40 வரிகளில் எல்லா மெய்ந்நூல்களின் கருத்துகளையும் அடக்கி, அளவை நெறிகொண்டு (தருக்க முறையைப் பின்பற்றி) மிகத் திட்பமும் நுட்பமும் அமையச் சித்தாந்த கருத்துக்களை முழுமையாக விளக்கும் முதல் நூல் இது. முதற்கண் சிறப்புப் பாயிரம் அமைந்துள்ளது. பின் தற்சிறப்புப் பாயிரமாக அமைந்த 'மங்கல வாழ்த்து', 'அவையடக்கம்' ஆகிய இரு செய்யுட்களும் பல பொருள்களைத் தம்மிடத்தே

கொண்டு செறிந்துள்ளன. இதன் நூற்பாக்கள் பல கூறுகளாகப் (அதிகரணங்களாகப்) பிரித்து ஆசிரியரே சுருக்கமான பொழிப்புரை (வார்த்திகம்) கூறியுள்ளார். இந்த உரை 'மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு' என்னும் உறுப்புகளைக் கொண்டது. எடுத்துக்காட்டுகள் வெண்பாவால் ஆகியவை. மேற்கோளில் பொருளை இயம்புகிறார். ஏது, எடுத்துக்காட்டுகளால் நிலை நாட்டுகிறார்.

தொடக்கத்தில் பொள்ளாப் பிள்ளையாருக்கு வணக்கம் கூறப்பெற்றுள்ளது. வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகிய மூன்றற்கும் பொருந்த இவ்வண்ணம் அமைந்திருப்பது போற்றற்குரியது. பின்வரும் நூற்பாக்களைப் போலவே இவ்வணக்கமும் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளக்கும் பெற்றியது. அடுத்துள்ள அவையடக்கப் பாடலும் தனிச்சிறப்புடையது. தம்மையும் தம் தலைவனையும் உணர்ந்தவர்களுக்குரிய சிறப்பையும், அவ்வாறு உணராதவர்களுக்கு உரிய சிறப்பின்மையையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது. இறை, தளை, உயிர் ஆகிய மூன்றும் உள்பொருளே என்பதை முதல் மூன்று நூற்பாக்களும் நிறுவுகின்றன. ஆதலின் இவற்றைப் பிரமாண இயல் என்பர். அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் இவற்றின் இலக்கணங்களை விரித்துரைப்பன. ஆதலின் அவற்றை இலக்கண இயல் என்பர். இம்முப்பொருள்களில் உயிர் இறையருள்வழி நின்று ஏனைய இரண்டையும் உணர்தற்குரியது. ஆதலின் இவ்வுயிர் தவத்தால் குருவருளைப் பெற்று உய்திபெற வேண்டுமென்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அதனைச் சாதன இயல் என்பர். அச்சாதனத்தால் உயிர் பாச நீக்கமும் சிவப்பேறும் பெற்று அச்சிவப்பேற்றினின்றும் வழுவாது இருத்தற்குரிய அருமையும் பெற்று வாழும், வாழவேண்டும் என்பதை அடுத்துள்ள மூன்று நூற்பாக்களும் கூறுகின்றன. ஆதலின் அவற்றைப் பயனியல் என்பர். தாம் எடுத்துக்கொண்ட கருத்துக்களை ஏதுக்களானும் எடுத்தமொழியானும் ஆராய்ந்து உணர்தற்கு ஏதுவாக முப்பத்தொன்பது அதிகரணங்களையும், எண்பத்தொரு வெண்பாக்களையும் ஆசிரியர் அருளியுள்ளார். நூற்பாக்களும் வெண்பாக்களும் சுவையுடையன. 'அமைச்சு அரசு ஏய்ப்ப', 'விளங்கிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா ஆங்கவை போல', 'உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ', 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்' எனவரும் உவமைகள் மிக எளிமையும் இனிமையும் உடையன. இவை நூற்பாக்களில் உள்ளன. இவை போன்றே 'பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும் எண்ணும் சுவையும் போல', 'அரக்கொடு சேர்த்தியணைத்த அக்கற்போல்', 'பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும்' என்பன போன்ற உவமைகள் வெண்பாக்களிலும், 'ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந்துணையான்', 'வேம்பு நின்ற புழுப்போல' என்பன போன்ற உவமைகள் அதிகரணங்களிலும் இருந்து அணி செய்கின்றன. தத்துவக்கூறுகளை இத்தகைய உவமைகளின் மூலம் விளக்கும் ஆசிரியரின் அருளுள்ளம் அறிதற்குரியது. 'ஐம்புல வேடர்', 'தண்ணிழலாம்பதி' எனவரும் உருவகங்கள் மிகவும் நுட்பம் வாய்ந்தன.

இத்தகைய ஒப்புயர்வற்ற முழு முதல்நூலைச் செய்தருளினவர் மெய்கண்டார்; நூல் செய்தவுடன் தம் பணி நிறைவடைந்தது என அவர் நினைக்கவில்லை. வாழையடி வாழையென

நிலவும் திருக்கூட்டத்தை உருவாக்க இந்நூலாலும் பிறவாற்றாலும் அருணந்தி தேவர் முதலிய மாணாக்கர்கட்குச் சித்தாந்தத்தினைத் தெளிய உணர்த்தியருளினார். இந்த மாணாக்கர்களும் தங்கள் நூல்களாலும், உபதேசங்களாலும் எங்கும் சித்தாந்தத்தினை விளங்கச் செய்தனர். இவ்வாறு மெய்கண்டார் சந்தானம் அன்றுதொட்டு இன்றுவரை தமிழ்நாட்டில் சிறந்தோங்கி நிற்கின்றது. இக்காரணங்களால் மெய்கண்ட தேவரைச் சித்தாந்தத்தின் முதல் ஆசிரியராகக் கருதுவர் சிலர். இங்ஙனம் கருதுவதற்குரிய பெருமையுடையவர் மெய்கண்டார் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. ஆயினும், சித்தாந்தத்தை அவரே படைத்தார் என்று கருதுவது சரியன்று, மெய்கண்டாருக்கு முன்னரே திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு சித்தாந்த நூல்கள் உள்ளன; மற்றும் ஞானாமிர்தம், துகளறு போதம் முதலியனவும், சித்தாந்த சாராவளி, அட்டப் பிரகரணம் முதலிய வடநூல்களும் இருத்தலை நாம் அறிகின்றோம். ஆகவே, "பரந்து கிடந்த சித்தாந்தப் பொருள்களை ஒரு கோவைப்பட அளவை முறையால் முறைப்படிச் செய்தருளினவர் மெய்கண்டார்" என்பதை நாம், ஒப்புக் கொண்டேயாக வேண்டும், இதனால் இது "சித்தாந்த முதல் நூல்" என்று போற்றப் பெறுகின்றது.

சிவஞான சித்தியார் (4) சிவஞான போதத்தின் பொருளை மிக விரித்துச் செய்யப்பெற்ற வழிநூலாகும். சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் இதுவே மிகப் பெரிய நூலாகும். இது 'பரபக்கம், சுபக்கம்' என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இரண்டையும் இருவேறு நூல்கள் என்று கருதும் அளவுக்கு மிகப் பெரிய நூல். பரபக்கம் 301 திருவிருத்தங்களையும், சுபக்கம் 323 திருவிருத்தங்களையும் கொண்டவை. எனவே, இதனைச் சிவஞான போதத்திற்குச் செய்யுளால் அமைந்த மாபாடியம் என்று கருதலாம். இதன் பரபக்கம் பிற சமயங்களின் பொருளை அவை கூறுமாறே கூறி, அவற்றை அவ்விடத்திலேயே சித்தாந்தப் பார்வையால் மறுக்கின்றது. அதனால் பரபக்கம் முழுவதும் மதமும் மறுதலையுமாக அமைந்துள்ளது. சுபக்கம் சிவஞான போதத்தின் ஒவ்வோர் நூற்பாப் பொருளையும் ஒவ்வோர் இயலாக வைத்து அதன் போக்கிலேயே சித்தாந்தக் கருத்துக்களைத் தடைவிடைகளால் விளக்குகின்றது.

பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட சிவஞான போதத்தின் பொருளை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப் பல சார்பு நூல்களும், பிற நூல்களும் உள்ளன. இருப்பினும், இருநூறு ஆண்டுகட்கு முன் அருளாட்சி புரிந்த திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர்களுள் முதன்மையானவராக விளங்கிய திருவளர்திரு மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான போதத்திற்குச் சுருக்கமாகவும், விரிவாகவும் செய்த சிற்றுரை மற்றும் பேருரைகள் தலைசிறந்த உரைகளாக விளங்குகின்றன. பேருரையே மாபாடியம் எனப்படுகிறது. மாபாடியம் செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது.

"பேருரை" அல்லது "மாபாடியம்" என்பது சூத்திரத்தில் சொல்லப்பட்ட பொருளேயன்றி அப்பொருட்கு எவ்வாற்றாலேனும் இயைபுடைய பொருள்களைப் பிற இடத்திலிருந்தேனும் கொணர்ந்து அவ்விடத்துத் தந்துரைப்பதேயாகும்.

இவ்வுரைகளின்றி இந்நூற் பொருளை உணர்தல் இயலாது. மாபாடியத்துள் சித்தாந்தப் பொருள் பலவற்றையும் நுணுக்கமாக விளக்கியிருக்கும் அருமைப்பாட்டைக் காணலாம். இவற்றைத் தெளிவாக உணர்வதற்குச் சிறந்த தமிழறிவும், ஓரளவு வடமொழியறிவும், அளவை நூல் பயிற்சியும் வேண்டும்.

இதை உணர்ந்த கீழ்க்கண்ட பல ஆசிரியப் பெருமக்கள் பல்வேறு காலங்களில் உரைகளை எழுதி நாம் உய்வதற்கு வகை செய்துள்ளார்கள்.

**உரையாசிரியர் பட்டியல்**

**பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மெய்கண்ட தேவநாயனார் இயற்றிய சிவஞான போதத்தைத் தழுவி இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்:**

1. சிவஞானபோதம் – பாண்டிப்பெருமாள் விருத்தியுரை.
2. திராவிட மாபாடியம் – மாதவச் சிவஞான முனிவர் – பேருரை, சிற்றுரை – 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.
3. சித்தாந்தப்பட விளக்கம் – திருப்பெருந்திரு. வாலையானந்த சுவாமிகள் – சைவ வித்தியாநு பாலன அச்சியந்திர சாலை – 1917.
4. மெய்கண்டாரும் சிவஞானபோதமும் – கா.சு. பிள்ளை – சைவ சித்தாந்த மகா சமாசம் – 1932.
5 சிவஞான போதமும், வார்த்திகப் பொழிப்புரையும், மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்த சிவஞானபாடியமும் – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு – 1936, 1952.
6. மெய்கண்ட சாத்திரம் (சைவ சித்தாந்தம்) – தருமையாதீன வெளியீடு 1942, 1956, மூன்றாம் பதிப்பு (1988) – பதிப்பாசிரியர் – சி. அருணைவடிவேல் முதலியார்.
7. சிவஞான போத ஆராய்ச்சி – மறைமலையடிகள்.
8. சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும் – கழக வெளியீடு – ப. இராமநாதப்பிள்ளை – டிசம்பர் 1958.
9. சிவஞானபோத சிற்றுரை விளக்கம் – தூத்துக்குடி பொ. முத்தையாபிள்ளை.
10. மெய்கண்ட சாத்திரங்கள் – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் – 1984 – அம்பை இரா. சங்கரனார்.
11. சிவஞான மாபாடிய ஆங்கில உரை – க. வச்சிரவேலு முதலியார் – மதுரை காமராசர் பல்கலைக்கழகம் – 1985.

12. முப்பத்தாறு தத்துவங்கள் – முரு. பழ. இரத்தினம் செட்டியார் – இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கு – கோலாலம்பூர், மலேசியா – 1986.

13. மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்த சிவஞானமாபாடியம் – உலகத்தமிழ்க் கல்வி இயக்கக வெளியீடு – 1986.

14. சிவஞான பாடியத்திறவு – சென்னைப் பல்கலைக்கழகம் 1988 – க. வச்சிரவேலு முதலியார்.

15. மெய்கண்ட சாத்திரங்கள் – சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை – 1988.

16. சிவஞானபோத மாபாடியப்பொருள் நிலை விளக்கம் – தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு – மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார் – டிசம்பர் 1991.

17. சிவஞானபோதச் சிற்றுரை – திருப்பனந்தாள் காசிமட வெளியீடு – கு. சுந்தரமூர்த்தி – மே 1991.

18. சிவஞானபோதம் – தெளிவுரை – கு. வைத்தியநாதன் – திருவாவடுதுறை ஆதீனம், சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் – 1994.

19. சிவஞான மாபாடிய விளக்கம் – சி.சு. மணி – அருள் நந்திசிவம் அருட்பணி மன்றம் – திருநெல்வேலி – 1994.

20. மறைஞானம் நல்கும் சிவஞான போதம் – உலக சைவப்பேரவை, இலங்கைக் கிளை – சைவநன்மணி ந. செல்லப்பா – கார்த்திகை – 1997.

21. சைவசித்தாந்த அகராதி – கழக வெளியீடு – அ.கி. மூர்த்தி – 1998.

22. சிவஞானபாடிய நுண்பொருள் விளக்கம் – ஆ. ஆனந்தராசன் – ஜுன் 2004 – அருள்நந்திசிவம் புத்தக நிலையம், திருநெல்வேலி.

23. புனிதராக்கும் போதமும், சித்தியும் – பேராசிரியர் மு. சிவச்சந்திரன் வெளியீடு – ஞானமலைப் பதிப்பகம் – ஜூலை 2004.

24. சிவஞானபோதம் : வழித்துணை விளக்கம் – ஆ. ஆனந்தராசன் – நர்மதா பதிப்பகம், சென்னை, 2014.

25. சிவஞானபோதக் கட்டுரை – மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் – 2005.

26. சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள் – வ.ஆ. தேவசேனாபதி.

27. மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் – முனைவர் நல்லூர் சா. சரவணன் – நண்பர்கள் வெளியீடு, சென்னை – 2008.

28. மெய்கண்ட சாத்திரம் (மூலமும் உரையும்) – முனைவர் அ. அறிவொளி – வர்த்தமானன் பதிப்பக வெளியீடு.

**29.** சிவஞான போதம் விளக்கவுரை – முனைவர் ந.இரா. சென்னியப்பனார் – பேரூர் மணிவாசக அருட்பணி மன்ற வெளியீடு – **2011.**

மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தோத்திரங்களுக்கும், சாத்திரங்களுக்கும் ஆற்றிய பணிகள் பெரும்பணிகளாகும். அவரால் எழுதப்பட்டு தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடாக வந்திருக்கும் "சிவஞானபோத மாபாடியம் பொருள் நிலை விளக்கம்" என்ற நூல் **பசுவாகிய நாம் பாசமாகிய தளைகளிலிருந்து விடுபட்டுப் பதியாகிய** இறைவனைச் சாரப் பேருதவியாக இருப்பதை உணர்ந்து நமது மையம் நூலை வெளியிட்டுக் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி ஒரு வழிபாட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திருவருள் கூட்ட அந்நிகழ்வுகள் அவ்வண்ணமே நடைபெறும்.

## நிகழ்ச்சி நிரல்

### 28.10.2018 ஞாயிறு

| சொற்பொழிவாளர் / நாள் / நேரம் | தலைப்பு |
|---|---|
| 1. முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் 28.10.2018 ஞாயிறு மாலை 02.00-04.00 | **சிவஞானபோத முன்னுரை, மெய்கண்டார், சிவஞானபோத வரலாறு, மாபாடியம் விளக்கம், 12 சூத்திரம் அறிமுகம்** |
| 2. சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 28.10.2018 ஞாயிறு பிற்பகல் 04.00 - 06.00 | **சிவஞானபோதம் - சிறப்புப் பாயிரம்** |

### 29.12.2018, 30.12.2018 சனி, ஞாயிறு

| சொற்பொழிவாளர் / நாள் / நேரம் | தலைப்பு |
|---|---|
| 1. பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 29.12.2018 சனி காலை 09.00 - 11.00 | சிவஞானபோதம் - **தற்சிறப்புப் பாயிரம்** |
| 2. சிவத்திரு **பவானி தியாகராசன்** அவர்கள் 29.12.2018 சனி நண்பகல் 11.00 - 01.00 | பிரமாண இயல் - **முதல் சூத்திரம் - சூத்திர பாடம் - முதல் அதிகரணம்** |
| 3. சிவத்திரு **மதன்முரளி** அவர்கள் 29.12.2018 சனி பிற்பகல் 02.00 - 04.00 | முதல் சூத்திரம் - **இரண்டாம் அதிகரணம் - மூன்றாம் அதிகரணம்** |
| 4. சிவத்திரு **ஜானகிராமன்** அவர்கள் 29.12.2018 சனி மாலை 04.00 - 06.00 | **இரண்டாம் சூத்திரம்** - சூத்திரபாடம் **முதல் அதிகரணம், இரண்டாம் அதிகரணம் (I)** |
| 5. சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 30.12.2018 ஞாயிறு காலை 09.00 - 11.00 | **இரண்டாம் அதிகரணம் (II)** |

| | |
|---|---|
| 6. சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள்<br>30.12.2018 ஞாயிறு நண்பகல் 11.00 – 01.00 | **இரண்டாம் அதிகரணம் (III)<br>மூன்றாம் அதிகரணம்** |
| 7. சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள்<br>30.12.2018 ஞாயிறு பிற்பகல் 02.00 – 04.00 | **இரண்டாம் சூத்திரம் – நான்காம் அதிகரணம்<br>மூன்றாம் சூத்திரம் பாடம் + 7 அதிகரணங்கள்** |
| 8. முதுமுனைவர்<br>**ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள்<br>30.12.2018 ஞாயிறு மாலை 04.00–06.00 | **நான்காம் சூத்திரம் பாடம் + 3 அதிகரணங்கள்** |

## 23.02.2019 சனி

| சொற்பொழிவாளர் நாள்/நேரம் | தலைப்பு |
|---|---|
| 1. பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள்<br>23.02.2019 சனி காலை 09.00 – 11.00 | **ஐந்தாம் சூத்திரம் - பாடம் + 2 அதிகரணங்கள்<br>ஆறாம் சூத்திரம் - பாடம் + 2 அதிகரணங்கள்** |
| 2. சிவத்திரு **பவானி தியாகராசன்** அவர்கள்<br>23.02.2019 சனி நண்பகல் 11.00 – 01.00 | **ஏழாம் சூத்திரம் - பாடம் + 3 அதிகரணங்கள்<br>எட்டாம் சூத்திரம் - பாடம் + 4 அதிகரணங்கள்** |
| 3. சிவத்திரு **மதன்முரளி** அவர்கள்<br>23.02.2019 சனி பிற்பகல் 02.00 – 04.00 | **ஒன்பதாம் சூத்திரம் - பாடம் + 3 அதிகரணங்கள்<br>பத்தாம் சூத்திரம் - பாடம் + 2 அதிகரணங்கள்** |
| 4. சிவத்திரு **ஜானகிராமன்** அவர்கள்<br>23.02.2019 சனி மாலை 04.00 – 06.00 | **பதினொன்றாம் சூத்திரம் - பாடம் + 2 அதிகரணங்கள்** |
| | **பன்னிரண்டாம் சூத்திரம் - பாடம் + 4 அதிகரணங்கள்** |

அடியார்கள் பங்கு பெற்றுத் திருவருள் பெற வேண்டுகிறோம்.

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு சைவசித்தாந்த சாத்திர நூலை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணரான திரு.மு. மகேஷ் அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

**இராச. வசந்தகுமார்**

நிறுவன வேந்தர்

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

இடம் : கோயம்புத்தூர்

நாள் : **1. 10. 2018**

# மெய்கண்ட தேவநாயனார் அருள் வரலாறு

*திருப்பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளர் என்ற ஒருவர் இருந்தார். அவர் வேளாண் மரபினர். திருத்துறையூரில் வாழ்ந்த சகலாகமபண்டிதர் அருணந்தி சிவாசாரியார் என்பார் இவர்தம் குலகுரு ஆவார். தமக்குப் பன்னாட்களாக மகப்பேறு இன்மையை இவரிடம் தெரிவித்தார். அவரும் அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்து அதன்வழி இறைவன் திருவுள்ளத்தை உணர்த்தி அருளினார். ‘பேயடையாப் பிரிவெய்தும்’ எனத் தொடங்கும் திருஞானசம்பந்தர் தம் திருவாக்கின்வழி, களப்பாளரும் அவர்தம் மனைவியாரும் திருவெண்காடடைந்து முக்குள நீராடி இறைவனிடத்துப்பாடு கிடந்தனர். இறையருளால் மகப்பேறு வாய்த்தது. அவ்வருமை மகவைத் திருவெண்காடர் (சுவேதனப் பெருமாள்) எனப் பெயரிட்டு அழைத்தனர். தாய்மாமனின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூரில் வளர்ந்த இக்குழந்தைக்கு ஈராண்டு தொடங்கியது.*

*திருக்கயிலையில் இறைவனிடத்திலிருந்து வழிவழியாக அருளுபதேசம் பெற்றவர்களில் நான்காமவரான பரஞ்சோதி முனிவர் என்பார். தம் தவநெறியால் விண்வெளிச்செல்லும் பொழுது, திருவெண்ணெய்நல்லூரில் இக்குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். மெய்யுணர்வு கைவரப்பெறும் பக்குவமுடைய அக்குழந்தையிடம் வந்து அதற்கு உபதேசம் செய்து சைவ சித்தாந்த மெய்ப்பொருளை அனைவர்க்கும் விளங்குமாறு நூல்வடிவில் செய்தருளப் பணித்தார்.*

*குழந்தைப்பேறு, பெயர் சூட்டுதல், இடம் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. நாம் அதை நினையாமல் “சரியை, கிரியை, யோக பாதங்களில் காலம், யுகங்களுக்கு ஏற்றவாறு வேறுபாடுகள் வரும். ஆனால் ஞானத்தை மறவாதீர்கள்” என்று நந்தியடிகளுக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரமொழியை நினைவிற் கொண்டு ஞான பாதத்துக்குச் செல்வோம்.*

*சிவஞானம் பெற்ற குழந்தையிடம் சிவஞானம் சித்திக்கப்பெற்றது. சிவம் பிரகாசிக்கவும் செய்தது. ஆதலின் குருமூர்த்தியால் பெற்ற மெய்யுணர்வை அனைவருக்கும் கூறியருளும் கடப்பாட்டில் நின்றார் மெய்கண்டார். இவர் தம் மரபிற்குக் குலகுருவாக இருந்த சகலாகம பண்டிதர் என்பார் இவர் தந்தையாரைக் காணவந்தார். இக்குழந்தை பாடம் சொல்லிவருவதையும் கேள்விப்பட்டு இவ்விடத்திற்கு வந்தார். அதுபொழுது மெய்கண்டார் ஆணவ மலத்தின் இயல்பை விளக்கிக் கொண்டிருந்தார். சகலாகமபண்டிதர் அக்குழந்தையை நோக்கி ஆணவ “மலத்தின் வடிவம் யாது?” எனக் கேட்டார். அருளுணர்வில் தோய்ந்திருந்த அக்குழந்தை தம் வலக்கைச் சுட்டுவிரலால் வினவியவரை காட்டியது. அவ்வளவில் அருளுணர்வு கைவரப்பெற்ற சகலாகமபண்டிதர் இக்குழந்தை தம்மை ஆட்கொள்ளும் குருமூர்த்தியே என்றெண்ணி இவரை வணங்கினார். சிறிய பெருந்தகையாராக இருந்த இவரும் அவரை மாணக்கராக ஏற்று அருளுபதேசம்*

*செய்தருளினார். இவ்வரலாற்றுக் குறிப்பினைப் பற்றி சில ஐயப்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் நிலவுகின்றன. "சித்திக்கு மேலான நூலில்லை" என்றொரு பழமொழி உண்டு. அவ்வளவு சிறந்த சிவஞானசித்தியார் என்ற நூலை இயற்றிய ஆசிரியர் அருணந்திசிவம் ஆணவ மலத்தைப் பற்றி அறியாமல் வினவியிருப்பாரா? என்ற கேள்விக்கு சுவாமிதான் விடையருள வேண்டும்.*

*மெய்கண்டாரிடம் மாணவராக இருந்தவர்கள் நாற்பத்து ஒன்பதின்மர் ஆவர். தமக்குப்பின் சைவ சந்தான குருபரம்பரையை வளர்த்துவரும் பணியை அருள்நந்தி சிவாசாரியாரிடம் வழங்கினார். பின் ஒரு ஐப்பசிச் சுவாதியில் அண்ணலார் சேவடிக்கீழ் அணைந்தருளினார். இவர் தம் வாழ்நாளில் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள மாத்தூரில் ஒரு ஏரியையும், மெய்கண்டதேவேசுரம் என்ற ஒரு திருக்கோயிலையும் அமைத்தார் என்றும், நாள் வழிபாட்டிற்கென ஐந்துவேலி நிலத்தை தேவதானமாக வழங்கினார் என்றும் திருவண்ணாமலைத் திருக்கோயிலுள்ள மூன்றாம் இராசராசனின் பதினாறாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக் குறிக்கின்றது. இவ்வரசனின் காலம் கி.பி. 1216 முதல் 1256 வரையாகும். எனவே இவரது காலமும் அக்காலமேயாகும்.*

## மெய்கண்டார் அருளிய சிவஞான போதம்

### மங்கல வாழ்த்து

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

### அவையடக்கம்

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் – தம்மை
உணரார் உணரார் உடங்கு இயைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

## 1. பொது அதிகாரம்

### பிரமாண இயல்

### முதல் நூற்பா

அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

### இரண்டாம் நூற்பா

அவையே தானே ஆய், இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

### மூன்றாம் நூற்பா

உளதுஇலது என்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

### இலக்கண இயல்

### நான்காம் நூற்பா

அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சு அவத்தைத்தே.

### ஐந்தாம் நூற்பா

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்துஅறிந்து அறியா ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத்து அவையே.

### ஆறாம் நூற்பா

உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

## 2. உண்மை அதிகாரம்

### சாதன இயல்

### ஏழாம் நூற்பா

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

### எட்டாம் நூற்பா

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

### ஒன்பதாம் நூற்பா

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்துஎனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும்அஞ் செழுத்தே.

## பயன் இயல்

### பத்தாம் நூற்பா

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடுவல்வினை இன்றே.

### பதினொன்றாம் நூற்பா

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

### பன்னிரண்டாம் நூற்பா

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத்தொழுமே.

*சிவஞான போதமருள் சைவ ஞானி*
*மெய்கண்ட தேவரவர் திருத்தாள் வாழி!*
*திருப்பெருந்திரு மெய்கண்ட தேவ நாயனார் திருவடிகள்*
*போற்றி! போற்றி!!*

*திருச்சிற்றம்பலம்.*

□

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

## சூத்திரம், அதிகரணம், வெண்பா அடைவு

| | சூத்திரம் | அதிகரணம் | வெண்பா |
|---|---|---|---|
| | 1 | 3 | 5 |
| | 2 | 4 | 10 |
| | 3 | 7 | 7 |
| | 4 | 3 | 7 |
| | 5 | 2 | 4 |
| | 6 | 2 | 6 |
| | 7 | 3 | 5 |
| | 8 | 4 | 9 |
| | 9 | 3 | 8 |
| | 10 | 2 | 6 |
| | 11 | 2 | 6 |
| | 12 | 4 | 8 |
| மொத்தம் | 12 | 39 | 81 |

| | |
|---|---|
| மங்கல வாழ்த்து | 1 |
| அவையடக்கம் | 1 |
| ஆக மொத்தம் | 83 |

□

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

# சிவஞானபோதம்

## (சுருக்க விளக்க அட்டவணை)

**பொது இயல்பு**
- **பிரமாண இயல்** — **1, 2, 3, சூ**
- **இலக்கண இயல்** — **4, 5, 6, சூ**

**சிறப்பு இயல்பு**
- **சாதன இயல்** — **7, 8, 9, சூ**
- **பயன் இயல்** — **10, 11, 12, சூ**

| | | |
|---|---|---|
| **பதி:–** | 1 – ஆவது சூத்திரம் | – உண்மை; |
| | 2 – ஆவது சூத்திரம் | – பொது இலக்கணம்; |
| | 6 – ஆவது சூத்திரம் | – சிறப்பு இலக்கணம்; |
| **பசு:–** | 3 – ஆவது சூத்திரம் | – உண்மை |
| | 4 – ஆவது சூத்திரம் | – பொது இலக்கணம் |
| | 7 – ஆவது சூத்திரம் | – சிறப்பிலக்கணம் |
| | 8 – ஆவது சூத்திரம் | – ஞானம் உணரும் முறை |
| | 9 – ஆவது சூத்திரம் | – ஆன்ம சுத்தி |
| | 11 – ஆவது சூத்திரம் | – சிவத்துவம் அடைதல் |
| | 12 – ஆவது சூத்திரம் | – சீவன் முத்தி |
| **பாசம்:–** | 2 – ஆவது சூத்திரம் | – உண்மை; |
| | 5 – ஆவது சூத்திரம் | – இலக்கணம்; |
| | 10 – ஆவது சூத்திரம் | – பாசநீக்கம்; |

*பதி, பசு, பாச உண்மையை 1, 3, 2 சூத்திரங்களால் உரைத்து, அவற்றின் இலக்கணத்தை 6, 4, 7, 5 சூத்திரங்களால் விளக்கி, 8, 9, 10 சூத்திரங்களால் முறையே ஞானம் உணரும் முறைமையையும், ஆன்ம சுத்தியையும், பாசநீக்கத்தையும், சிவயோகத்தையும் விவரித்து, 11-ஆம் சூத்திரத்தில் ஆன்மா சிவத்துவம் பெறுதலைக் காட்டி, 12-ஆம் இறுதிச்சூத்திரத்தில் அணைந்தோர் தன்மையையும் உணர்த்தியுள்ளார் மெய்கண்டதேவர். அவர்களது திருவடிகள் போற்றி! போற்றி!!*

***திருச்சிற்றம்பலம்***

# சூர்ணிக் கொத்து

அதிகரண எண்

## முதல் சூத்திரம்

1. *சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலை உடையது.*
2. *அது அரனாலே உடையது. (அரன் - முழு முதற்கடவுள் சிவபெருமான்)*
3. *மற்ற இருவரும் முத்தொழிற்படுவர்கள். (இருவர் - பிரமன், விட்டுணு)*

## இரண்டாம் சூத்திரம்

1. *அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்.*
2. *உயிர்களுக்குக் கன்மப் பலனை அரனே கொடுப்பன்.*
3. *உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்.*
4. *அரன் சருவ வியாபகன்.*

## மூன்றாம் சூத்திரம்

1. *இல்லை என்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறிஉயிர் உண்டு.*
2. *எனது உடல் என்று பொருட் பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிர் உண்டு.*
3. *ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேறாய் உயிர் உண்டு.*
4. *கனவுடலை விட்டு நனவுடலிலே வருகையினாலே அக்கனவுடற்கு வேறாய் உயிர் உண்டு.*
5. *நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவும் சரீரத்துக்குப் புசிப்புந் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு.*
6. *மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல் இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு.*
7. *எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தத் தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.*

## நான்காம் சூத்திரம்

1. *அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினால் அன்றித் தொழில் இல்லாதபடியினாலே, அந்தக்கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு.*

2. மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை.
3. உயிர் மூன்று அவத்தைப்படும்.

## ஐந்தாம் சூத்திரம்

1. உயிராலே தத்துவங்கள் எல்லாம் தொழில் செய்யும்.
2. அரனாலே உயிர்கள் எல்லாம் அறியும்.

## ஆறாம் சூத்திரம்

1. உயிர் அறிவினாலே அறியப்பட்டது எல்லாம் அழியும்.
2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்.

## ஏழாம் சூத்திரம்

1. அரன் பாசத்தை அனுபவியான்.
2. பாசம் அரனை அனுபவியாது.
3. உயிர் அவ்விரண்டினையும் அனுபவிக்கும்.

## எட்டாம் சூத்திரம்

1. உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்.
2. உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே.
3. உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது.
4. உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்றற்றால் தன்னையும் அறியும்.

## ஒன்பதாம் சூத்திரம்

1. உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும்.
2. உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்.
3. பஞ்சாட்சர செபம் பண்ணினால் வாசனாமலம் போம்.

## பத்தாம் சூத்திரம்

1. அரனுடன் ஒன்றாகி நில்.
2. உன் தொழில் எல்லாம் அரன் பணி என்றே கொள்.

## பதினொன்றாம் சூத்திரம்

1. *ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அனுபவிப்பன்.*
2. *அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்திலே ஐக்கியமாய்ப் போவன்.*

## பன்னிரண்டாம் சூத்திரம்

1. *மும்மலங்களையும் களைக.*
2. *சிவஞானிகளுடனே கூடுக.*
3. *சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே தேறி வழிபடுக.*
4. *வழிபடாமையை ஒழிக.*

*ஆகச் சூத்திரம் 12-க்குச் சூர்ணிக் கொத்து 39 முற்றுப் பெற்றது.*

**- திருவாவடுதுறை ஆதீனத்து சாமிநாத தேசிகர் அவர்கள்**

# மாதவச் சிவஞான யோகிகள் வரலாறு

*இவ்வுலகில் இந்திய நாடானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஏனைய நாடுகளைக் காட்டிலும் அறிவிற் சிறந்து விளங்கியதென்பதைப் பண்டைய தமிழ் இலக்கண இலக்கிய நூல்களால் நாம் நன்கு அறிகின்றோம். இவ்விந்திய நாட்டின் வடக்கெல்லையில் உலகிலுள்ள மலைகள் எல்லாவற்றினுஞ் சிறந்த இமய மலை உளது. அம்மலையின் முடிகளில் ஒன்றாக உலக முழுவதையும் ஆளும் சீகண்ட பரமசிவன் சிவகணங்களோடு வீற்றிருந்தருளும் திருக்கைலாயமலை விளங்குகின்றது. இங்ஙனஞ் சிறந்த இந்தியநாட்டின் தெற்கு எல்லையிலுள்ள தென்பாண்டி நாட்டிலே சீர்தங்கு செந்தமிழ்மொழியைச் சிறந்து விளங்கச் செய்த அகத்திய முனிவரென்னும் குறுமுனிவர் வீற்றிருந்தருளும் பெருமைவாய்ந்த பொதியமலைச் சாரலின் பாங்கிலுள்ள பாவநாசத் திருப்பதிக்கு அணித்தாக* **விக்கிரம சிங்கபுர***மென்ற சிற்றூர் ஒன்று உள்ளது. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்பு, அவ்வூரின் ஏழுதலைமுறை வரையும் அருட்புலமை நிரம்புமாறு அகத்திய முனிவர்பால் வரம்பெற்ற சைவவேளாளர் குலத்திலே, சிறந்த கல்வியறிவும், சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பும் மிக்குடையவராயுள்ள ஆனந்தக் கூத்தரென்பார் தம் கற்புடைய மனைவி மயிலம்மையாரோடு இல்வாழ்க்கை நடத்தி வருவாராயினர். அவருக்குச் சிவபெருமான் திருவருளாலும் அகத்திய முனிவர் வரத்தாலும், தென்றமிழ்நாடு செய்த தவப்பயனாக அவர்தம் மனைவியார் திருவயிற்றில் சைவசமயந் தழைத்தோங்கும்படி நற்புதல்வர் ஒருவர் தோன்றினார்.*

*ஆனந்தக்கூத்தர் பேருவகையுற்று, அவ்வரும்பெறற் குழந்தைக்குச் சிவாகம முறைப்படி பிறப்புக்குறிப்பு எழுதுதல் முதலிய சடங்குகளைச் செய்து* **முக்களாலிங்கர்** *என்று பெயரிட்டு அன்புடன் பேணி வளர்த்து வந்தார்.*

*முக்களாலிங்கருக்கு ஐந்தாண்டு நிரம்பவும், அவர் தந்தையார் அவருக்கு நற்கல்வி பயிற்றுவதற்காக அவரைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார். முக்களாலிங்கர் நாடோறும் பள்ளிக்குப் போய்க் கல்விபயின்று வந்தார். ஒருநாள் அவர் பள்ளியிலிருந்து தமது மனைக்குத் திரும்பி வரும்பொழுது காவியுடையணிந்த திருவாவடுதுறை மடத்துத் தம்பிரான்கள் சிலரைக் கண்டு, பெருமகிழ்வுற்று, அவர்களிடம் சென்று வணங்கி 'அடிகளே! எங்கள் மனைக்கு எழுந்தருளிவந்து திருவமுது செய்தருளவேண்டும்' என்று அவர்களை இரந்து வேண்டினர்.*

*தம்பிரான்களும் அக் குழந்தையாரின் அரும் பெருங் குணத்தை வியந்து*

பாராட்டி, அவர் வேண்டுகோளுக் கிசைந்து, அவர் வழிகாட்ட அவர்தம் மனைக்குச் சென்றனர்.

முக்களாலிங்கர் தமது மனையில் தம்பிரான்களை ஓர் இருக்கையில் இருக்கச் செய்தார். அப்பொழுது அவர் தந்தையார் வெளியே சென்றிருந்தாராகலின், அவர்தம் அருமைத் தாயாரிடம் போய்த் தாம் அழைத்து வந்திருக்கும் தம்பிரான்களுக்கு உணவளிக்க வேண்டுமென்று கூறினர். அதுகேட்ட தாயார், தம் புதல்வர் செய்கையை வியந்து, தம்பிரான்களை வரவேற்று வணங்கி, அவர்களைத் தமது மனையில் அமுதுசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். பின்பு அவ்வம்மையார் இன்னடிசில் அறுசுவைக் கறிகளோடும் சமைத்துத் தம்பிரான்களைத் திருவமுது செய்வித்தனர். திருவமுது செய்து மகிழ்ந்து வீற்றிருக்கும்பொழுது தம்பிரான்களுள் ஒருவர் அவ்வம்மையாரைப் பாராட்டி,

> "அருந்ததியென் அம்மை அடியவர்கட் கென்றுந்
> திருந்த அமுதளிக்குஞ் செல்வி - பொருந்தவே
> ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
> மானந் தவாத மயில்"

என்னுந் திருப்பாடலைப் பாடினர்.

பின்பு, தம்பிரான்கள் அவ்வம்மையாரையும் முக்களாலிங்கரையும் வாழ்த்தி விடைபெற்றுச் சென்று, அவ்வூரிலுள்ள திருமடமொன்றில் தங்கியிருந்தார்கள்.

சிறிதுநேரம் சென்றபின், வெளியே போயிருந்த ஆனந்தக்கூத்தர் திரும்பிவந்து, தம் மனைவியாரால் அங்கு நிகழ்ந்த செய்தியை யறிந்து, தம் அரும்புதல்வரை மார்போடு தழுவி முத்தமிட்டு, அவரது நற்பண்பைப் புகழ்ந்து பாராட்டினர்.

பின்னர், அவர் தம் புதல்வரோடு தம்பிரான்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களை வணங்கி நின்றனர்.

அப்பொழுது முக்களாலிங்கர், தம்பிரான்களுடன் திருமடத்திற்குச் சென்று, அங்கு மெய்யறிவு நூல்களைக் கற்றுத் துறவுநிலையை யடையவேண்டுமென்ற தமது உட்கருத்தைத் தந்தையார்க்குத் தெரிவித்தார். அதுகேட்ட தந்தையார் தம் தவப்புதல்வரை விட்டுப் பிரிந்திருப்பதற்கு உள்ளம் பொறாதவராய் வருந்திப் பின் மகனார் நற்கருத்துக்கு இடையூறாய்த் தாம் நிற்பது சரியன்றென்று ஒருவாறு தேறி, மகனாரைத் தம்பிரான்களிடம் ஒப்புவித்துத் தமதில்லத்திற்குச் சென்றனர்.

பின்பு, தாயாரும் அதனைக்கேட்டு முதற்கண் தம் மகனாரைப் பிரிந்திருக்க வருந்தினாரேனும், பின் தங்கணவனார் கருத்துக்கு இணங்கி மனந்தேறினர்.

தம்பிரான்கள் முக்களாலிங்கரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, அக்காலத்துத் திருவாவடுதுறை மடத்துச் சின்னப்பட்டத்துத் தம்பிரான் எழுந்தருளியிருந்த சேரநாட்டெல்லையிலுள்ள சுசீந்திரத்திலிருக்கும் ஈசானமடத்தைச் சேர்ந்தார்கள். அம்மடத்தில் திருக்கோயில்கொண்டு விளங்கும் நமச்சிவாயமூர்த்தியின் திருவுருவத்தைத் தம்பிரான்கள் முக்களாலிங்கருடன் வணங்கியபின், சின்னப்பட்டத்து எழுந்தருளியிருந்த வேலப்பதேசிகரைக் கண்டு வணங்கினார்கள். அவ் வாசிரியர், தம்பிரான்களுடன் வந்த முக்களாலிங்கரை யாரென்று வினவ, அவர்கள் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

வேலப்பதேசிகர் அவருடைய முதிர்ந்த அறிவை வியந்து பாராட்டி, அவருக்குச் சமயதீக்கை, சிறப்புத்தீக்கைகளைச் செய்து, காவியுடை தந்து துறவுநெறியை யடைவித்து மெய்யறிவு நூல்களை ஐயந்திரிபற உணர்த்தி யருளினார்.

பின்பு, சிலகாலம் முக்களாலிங்கர் வடமொழித் தென்மொழிச் சைவசித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்து, மெய்யறிவும் குன்றாத ஒழுக்கமு முடையவராய் விளங்கினார். ஆசிரியர் வேலப்பதேசிகர் அவருடைய மெய்யறிவு நிலையையும் விழுமிய ஒழுக்கத்தையுங் கண்டு, நிருவாண தீக்கைசெய்து **‘சிவஞானம்’** எனத் தீக்கைப் பெயர் வழங்கி, மெய்கண்ட நூல்களையும் பண்டார நூல்களையும் அறிவுறுத்தி வீடடைதற்கு வழிகாட்டியருளினார்.

வேலப்பதேசிகர் சிவஞானத் தம்பிரானுக்குத் தீக்கைகள் செய்தருளிய ஞானாசிரியரென்பது, சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் தாம் பாடிய காஞ்சிப் புராணக் கடவுள்வாழ்த்துச் செய்யுட்களில், வேலப்பதேசிகர் துதியாகப் பாடிய,

“எவ்வெவர்கோட் படுபொருளு மஞ்செழுத்தின்
அடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்”

என்னுஞ் செய்யுட்கருத்தால் விளங்கும்.

சிவஞானத் தம்பிரான் வடமொழிக் கலைகளையும் தென்மொழிக் கலைகளையும் கற்றுணர்ந்து திருமொழிகளிலும் பெரும்புலவராக விளங்கினார்.

சிலகாலஞ் சென்றபின், வேலப்பதேசிகர் திருவாவடுதுறையிலுள்ள தம் ஞானாசிரியரைப் பார்க்க விரும்பி, சிவஞானத் தம்பிரான் சுவாமிகளையும் ஏனைய தம்பிரான்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சுசீந்திரத்தை விட்டுப் புறப்பட்டனர். போகும் வழியில், பாண்டிநாட்டிலுள்ள பல திருப்பதிகளை வணங்கியபின், செப்பறையை யடைந்து, அவ்வூரில் திருக்கோயில்கொண் டருளியிருக்கும் அழகிய கூத்தப்பிரானையும், சிவகாமியம்மையையும் வணங்கி, அருகாமையிலுள்ள இராசவல்லிபுரத்தில் வீற்றிருந்தருளும் அகிலாண்டேசுவரியின் மீது சுவாமிகள் வேலப்பதேசிகர் ஆணையின்படி சைவசித்தாந்தக் கருத்துக்களடங்கிய பதிகமொன்றைப் பாடி அவ்வாசிரியர் முன்பே அரங்கேற்றினர்.

பின், வேலப்பதேசிகர் தம் மாணவரோடு கொங்கு நாட்டிலுள்ள பல தலங்களையும் வணங்கித் திருப்பேரூரையடைந்து, அங்குக் கூத்தப்பிரானையும், சிவகாமியம்மையையும் வணங்கிக்கொண்டு தங்கியிருந்தனர். சில நாட்களில் வேலப்ப தேசிகர் அவ்வூரிலேயே சிவபிரானுடைய திருவடி நீழலை அடைந்தார்.

சிவஞானசுவாமிகள் தம் ஞானாசிரியருக்குப் பத்துநாளும் செய்யவேண்டிய அறிவுச் சடங்குகளைச் செய்துமுடித்து, அவருக்கு வழிபாடியற்றத் தம்பிரான் ஒருவரை அங்கே வைத்து விட்டு, ஏனைய தம்பிரான்களோடும் திருவாவடு துறையையடைந்து, அங்கு மடத்தின் முதலாசிரியராகிய நமச்சிவாய அடிகளின் திருவுருவத்தை வழிபட்டபின், அக்காலத்து ஒன்பதாவது ஆசிரியராக வீற்றிருந்த வேலப்பதேசிகரைக் கண்டு வணங்கி அவர் திருவருள்பெற்று, சுசீந்திரத்திலிருந்து வரும் வழியில் திருப்பேரூரில் இரண்டாவது ஆசிரியராகிய வேலப்பதேசிகர் இறைவனடிநீழலை யடைந்த செய்தியையும், பிற செய்திகளையும் தெரிவித்தார்.

அதுகேட்ட ஞானாசிரியர் தம் தம்பிரான்கள் பல்லோருள்ளும் சிறந்த வேலப்பத் தம்பிரானுக்கு இரண்டாவது ஆசிரியப்பட்டம் சூட்டியருளினர்.

சிலகாலம் சென்றபின் முதலாவது ஞானாசிரியராகிய வேலப்பதேசிகர், இரண்டாவது ஞானாசிரியராகிய பின் வேலப்பதேசிகரையும், சிவஞானமுனிவர் முதலிய தம்பிரான்களையும் அழைத்துக்கொண்டு, திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டு, வழியிற் பல திருப்பதிகளையும் வணங்கி முடிவில் சுசீந்திரத்தை யடைந்தார்.

அங்கு அவர் இரண்டாவது ஆசிரியரை வைத்துவிட்டு ஏனைய தம்பிரான்களுடன், திருக்குற்றாலம் சென்று பணிந்து, சங்கரநயினார் கோவிலைச் சேர்ந்தனர். அவ்வூரிற் சிலநாள் தங்கியிருக்கும்பொழுது அவர் சிவபிரான் றிருவடி நீழலையடைந்தார்.

இந்தச் செய்தியைச் சிவஞானமுனிவர் சுசீந்திரத்திலிருந்த இரண்டாவது ஞானாசிரியராகிய பின் வேலப்பதேசிகருக்குத் தெரிவிக்க, அவர் சில தம்பிரான்களுடன் அங்கு வந்து ஞானாசிரியருக்குச் செய்யவேண்டிய அறிவுச்சடங்குகளையெல்லாம் செய்து முடித்தபின், சிவஞானமுனிவர் முதலியவர்களுடன் திருவாவடுதுறையை அடைந்து முதலாவது ஞானாசிரியராக எழுந்தருளியிருந்தார். பின்னர் அப்பொழுது அங்கிருந்த தம்பிரான்களிற் சிறந்தவராகிய **திருச்சிற்றம்பலத்** தம்பிரானைத் தமக்கடுத்த இரண்டாம் ஆசிரியராகப் பட்டஞ் சூட்டியருளினார்.

சிவஞானமுனிவர் திருவாவடுதுறையிலிருந்த காலத்தில் **பஞ்சாக்கர தேசிகர்மாலை** என்ற சமயநூலை இயற்றியருளினார்; நண்பர்கள் சிலரும், மாணாக்கர்களும் அவரை வேண்டிக் கொண்டபடி - நெல்லை **சங்கர நமச்சிவாயப் புலவர்** இயற்றிய விருத்தியுரையை ஆராய்ந்து பார்த்து, அதில் தாம் கண்ட பிழைகளை நீக்கித் திருத்தஞ் செய்தருளினர்; திருவாரூர் **வைத்தியநாததேசிகர்** இயற்றிய **இலக்கணவிளக்கம்** என்ற இலக்கண நூலை ஆராய்ந்து பார்த்து, அதிற் காணப்பட்ட பிழைகளைக் குறிப்பிட்டு **இலக்கணவிளக்கச் சூறாவளி** என்ற ஓரிலக்கண நூல் செய்தருளினர். திருவாவடுதுறைத் தம்பிரான் ஒருவர் இயற்றிய **மரபட்டவணை** என்ற சைவசித்தாந்த நூலிற் கண்ட கருத்துக்களை மறுத்துத் தருமபுர ஆதினத்தைச் சேர்ந்த தம்பிரான் ஒருவர் சித்தாந்த மரபுகண்டனம் என்ற பெயரால் எழுதிய மறுப்பு நூலுக்கு, நமது தம்பிரான்சுவாமி அம்மறுப்பு நூலிற்கண்ட கருத்துக்களை மறுத்து, மரபட்டவணை நூலின் உண்மைகளை ஆதரித்து விளக்கி, **'சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம்'** என்னும் நூலை இயற்றியருளினர். பின் அவர் மெய்கண்டார் செய்த சிவஞானபோத முதனூலுக்கு ஒரு சிற்றுரையும், அருணந்தி சிவாசாரியர் செய்த சிவஞானசித்தியார் சுபக்கம் என்ற வழிநூலுக்குப் பொழிப்புரையும் செய்தருளினர்.

இங்ஙனம் அருட்பணி யாற்றியபின், அவர் ஞானாசிரியர் வேலப்பதேசிகரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தம் மாணாக்கர்கள் சூழத் திருத்துருத்தி, மாயூரம் என்னும் திருப்பதிகளுக்குச் சென்று, அங்குத் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் சிவபிரானையும் இறைவியையும் வணங்கினர். பின் அவர் திருத்தில்லைக்குப்போய், அங்கே கூத்தப் பிரானையும் சிவகாமி யம்மையையும் வழிபட்டுக் கொண்டு சிலநாள் வதிந்திருந்தனர். அந்நாட்களில் அவர் கொற்றவன் குடிக்குப் போய் அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் உமாபதி சிவத்தையும், அருணமச்சிவாய தேசிகரையும் வணங்கிக் கொண்டு, திருக்களாஞ்சேரி சென்று அங்குத் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் மறைஞான சம்பந்தரை

வணங்கியபின் திருத்தில்லைக்கு மீண்டருளினர். பின்பு அவர் திருத்தில்லையில் கூத்தப்பிரானை வழிபட்டு விடைபெற்றுக்கொண்டு, திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று சிலகாலம் தங்கி யிருந்தனர்.

அங்கு ஒருநாள் கோயிலின்முன் கூடியிருந்த புலவர் பேரவையொன்றில், கல்விநலமும் செல்வநலமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒருவர் நூறுபொன் கட்டிய ஒரு பொன் முடிப்பை அவையார் முன்பு வைத்து, "கரையேற விட்ட முதல்வா உன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ?" என்ற அடியை நான்காவது அடியாகக் கொண்டு ஒரு செய்யுளியற்றித் தருபவர்க்கு அப்பொன் முடிப்பைக் கொடுப்பதாக உரைத்தனர். அன்று மாலை வரையும் அவ்வவையிலிருந்த புலவர்கள் எவரும் அச்செய்யுளைப் பாடி முடிக்கவில்லை. இதனையறிந்த ஓர் ஏழை அந்தணன், அப்பொழுது அவ்வூரிலிருந்த சிவஞான முனிவரிடம்போய் அச்செய்யுளைப் பாடித்தரும்படி குறையிரந்தான். அவர் அச்செய்யுளை,

"வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வுண்டனைவல் லினமென் றாலும்
உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கி லென்னாம்
நரையேற விட்டமுத னாளவனாக் கொண்டுநறும் புலிசை மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ"

எனப் பாடி முடித்து, ஓர் ஏட்டில் எழுதி அவன் கையிற் கொடுத்தார். அவ்வேழை அந்தணன் ஏட்டினை வாங்கிக் கொண்டு அவையாரிடம் போய் அச்செய்யுளை ஓதிப் பொன் முடிப்பைப் பெற்றுத் தனது வறுமை தீர்ந்தான்.

பின் அவர், திருப்பாதிப்புலியூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் தோன்றாத்துணை ஈசரையும் தோகையம்பிகை அம்மையாரையும் வழிபட்டுக் கொண்டு சிலநாள் தங்கியிருந்தனர்.

சிலநாட்கழிந்தபின் அவர், திருப்பாதிரிப்புலியூரில் இறைவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு காஞ்சிபுரத்திற்குப் போய் அங்கு ஏகாம்பரநாதரையும், காமாட்சியம்மையாரையும் வழிபட்டுக் கொண்டு சிலநாள் வதிந்திருந்தனர். அங்கு அவர் இருந்தபொழுது, திருமால் அடியார்களிற் சிலர் அவரிடம் வந்து 'எங்கள் கம்பராமாயணம் ஒன்றுமே தமிழில் சிறந்து விளங்கும் நூல்' என்று கூறினர். அடிகள் அவர்கள் எண்ணிய தப்புக்கருத்தை அவர்கள் மனதிலிருந்து நீக்க வேண்டிக் கம்பராமாயணத்தில், "நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்" என்ற காப்புச்செய்யுளே முழுவதும் குற்றம் எனத் தெரிக்கும் சங்கைகளை அவர்கட்குக் கூறினர். அச்சங்கைகளைக் கேட்ட திருமால் அடியார்கள் அவற்றிற்கு விடைகூறும் ஆற்றலில்லாதவராகி, அடிகளிடம் தங்கள் குற்றத்தைப் பொறுத்தருள

*வேண்டும் என்று தாழ்வுடன் வேண்டினர். அப்பணிவுரையைக் கேட்ட அடிகள் தாமே அச்சங்கைகளுக்கு விடைகூறி, அவர்களை மகிழ்வித்தனர். அச்சங்கைகளும் விடைகளும் சேர்ந்த நூல் இப்பொழுது* **“கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி”** *என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது.*

*திருவண்ணாமலை ஆதீனப்பண்டார சந்நிதிகளில் ஒருவர் காஞ்சிபுரத்திற்கு வந்து, தம் மாணவர் ஒருவரை அடிகளிடம் அனுப்பி, தமது மடத்து ஆசிரியராகிய ஞானப்பிரகாச முனிவர் சிவசமவாதக் கொள்கையைத் தழுவி எழுதிய சிவஞான சித்தியார் உரையானது, அடிகள் எழுதிய சிவஞான சித்தியார் உரையைப் பார்க்கினுஞ் சிறந்ததாயுள்ளது என்று சுட்டிக் காட்டவேண்டுமென்ற உட்கருத்தைக் கொண்டு, சிவஞான சித்தியார் சுபக்கத்தில், “என்னையிப் பவத்திற் சேரா வகை எடுத்து” என்ற முன்னூற் சிறப்புச் செய்யுளில் வருகிற ‘எடுத்து’ என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்ன? என்று வினாவுமாறு செய்தனர். அடிகள் திருவண்ணாமலை ஆதீனப் பண்டார சந்நிதியின் உட்கருத்தை யுணர்ந்து,* **‘எடுத்து என்னுஞ் சொல்லுக்குச் சிவசமவாத வுரைமறுப்பு’** *என்ற நூலை இயற்றினர். இந்நூலை ஓதிய பண்டார சந்நிதி அதற்கு ஒரு மறுப்புரை எழுதி வெளிப்படுத்தினர். அடிகள் தம் மறுப்புரையை யறிந்து அதனை மறுத்து* **“எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்”** *என்ற நூலை எழுதியது மன்றி, சிவஞான சித்தியார்க்கு ஞானப்பிரகாச முனிவர் எழுதிய உரை முழுவதுதே போலியுரையென விளக்கி,* **“சிவசமவாத வுரை மறுப்பு”** *என்ற கண்ட நூலையும் எழுதி வெளிப்படுத்தினர்.*

*அடிகள் காஞ்சிபுரத்திலிருந்த காலத்தில் சைவசித்தாந்த ஆசிரியராகிய சர்வாத்ம சம்பு சிவாசாரியார் வடமொழியில் எழுதிய “சித்தாந்தப் பிரகாசிகை” என்ற நூலையும், கஞ்சனூர் அரதத்த சிவாசாரியார் வைணவமதக் கண்டனஞ் செய்து, சிவபெருமானே பரம்பொருள் என்று இருபத்திரண்டேதுக்களால் நிலைநாட்டி, வடமொழியி லெழுதியருளிய ‘சுலோக பஞ்சகம்’ என்ற நூலையும், வடமொழியிலுள்ள தர்க்க சங்கிரக அன்னம் பட்டீயங்களையும் தமிழிலே மொழிபெயர்த்து வெளியிட்டனர். மேலும் அடிகள், சைவப் பெரியாராகிய அப்பய்ய தீக்கிதர் வடமொழியில் பாடிய* **‘சிவதத்துவ விவேகம்’** *என்ற நூலையும் தமிழ்மொழி இலக்கண முதனூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்ற மூவர்களும் செய்த உரைகளிற் கண்ட சில ஐயப்பாடுகளையும் வழுக்களையும் நீக்கித் தெளிவிக்கும் பொருட்டு அத் தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத்திற்கும்* **சூத்திரவிருத்தி** *எனப் பெயர்பெற்ற ஓர் அரிய விரிவுரையையும் செய்தருளினர்.*

*பின்னர் அடிகள், காஞ்சிபுரத்திலிருந்து திருவொற்றியூருக்குப் போய், அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மாணிக்கத் தியாகரையும் வடிவுடை நாயகி அம்மையாரையும் வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தார். அவ்வூரில் அக்காலத்திலிருந்த பெருஞ்செல்வர் மணலி சின்னையா முதலியார் என்பார் அடிகளை வணங்கித் தமதூராகிய திருவொற்றியூரிலேயே சிலகாலந் தங்கியிருக்கும்படி வேண்டினர்; அடிகளும் அதற்கிசைந்தனர். சிவஞானபோதத்துக்கு விரிவுரையொன்று இயற்றவேண்டுமென்று நெடுநாளாக எண்ணியிருந்த அடிகள், அவ்வெண்ணம் நன்கு நிறைவேறும் பொருட்டுச் சிவாகமங்களை ஓதியறிய வேண்டுமென்னுந் தமது கருத்தைச் சின்னையா முதலியாருக்கு வெளியிட்டனர். உடனே சின்னையா முதலியார் சிவாகமங்களை நன்கு ஓதிய சைவ அந்தணர்களைச் சில ஊர்களிலிருந்து வரவழைத்து, அவர்களை அடிகளோடிருந்து ஓதும்படி செய்வித்தார். அடிகள் சிவாகமங்களை அவர்களோடு ஓதி நன்கு கற்று ஆகமநூற் பொருள்களை முன்னொடு பின் மலைவின்றித் தெளிந்து உணர்ந்தனர். அவ் வந்தணர்கள் அடிகளது அறிவின் பேராற்றலைப் பெரிதும் வியந்து பாராட்டிச் சென்றனர்.*

*சிலகாலம் சென்றபின் அடிகள், சின்னையா முதலியாரிடம் விடைபெற்றுக் கொண்டு, திருவொற்றியூரைவிட்டுக் காஞ்சிநகர் சென்றனர். அங்கு அவர் ஏகாம்பரநாதரையும் காமாட்சியம்மையாரையும் வணங்கிக் கொண்டு சிலகாலம் வதிந்திருந்தனர். அங்கு வந்திருக்குங்காலத்தில், அவர் தாம் நெடுங்காலமாக எழுத வேண்டுமென்று எண்ணியிருந்த* ***சிவஞானபாடியத்தை*** *எழுதிமுடித்தனர். இந் நூலானது, இதுவரை தமிழ்மொழியிலும் வடமொழியிலும் எழுதப்பட்டுள்ள மாபாடியங்களெல்லாவற்றிலும் சிறந்ததொரு நூலாகும். ஆதலின் அடிகள் "மாபாடியச் சிவஞான யோகிகள்" என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்படு வாராயினர்.*

*பின், அவர் தாமியற்றிய சிவஞானபாடியச் சுவடியை எடுத்துக்கொண்டு காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருவாவடுதுறைக்குச் சென்றனர். அந்நாளில், சுசீந்திர மடத்திலிருந்த இரண்டாவது ஆசிரியராகிய திருச்சிற்றம்பல தேசிகரும் திருவாவடுதுறைக்கு வந்திருந்தனர். அடிகள் முதலாவது ஞானாசிரியரை வணங்கி அவருடைய திருவடிகளில் தாமியற்றிய சிவஞானமாபாடியச் சுவடியை வைத்தனர். ஞானாசிரியர் திருவுளமகிழ்ந்து, அடிகளுக்குப் பெருமகிழ்வுடன் நல்வரவு கூறி வியந்து வாழ்த்தினர். சிலநாட் சென்றபின், ஞானாசிரியர் ஆணைப்படி மடத்தில் அவர் முன்பு ஒரு பேரவை கூடியது.*

*அப் பேரவையில் திருச்சிற்றம்பலதேசிகர் முதலிய அடியார்களும், சைவசமயப் புலவர்கள் பலரும் குழுமியிருந்தார்கள். அவர்கள் முன்பு அடிகள் தாமியற்றிய சிவஞானமாபாடியம் என்ற நூலைத் தொடக்கத்திலிருந்து ஓதி அதிலெழுதப்பட்ட அரிய நுண்பொருள்களை யெல்லாம் விளக்கிச் சில நாட்களில் முடித்தனர். ஞானாசிரியர் அடிகள் செய்த சிவஞானமாபாடிய விளக்கவிரிவுரையைக் கேட்டு மகிழ்ந்து "***இம் மாபாடியந்தான் நம் திருச்சிற்றம்பலவர்க்கே முற்றிலும் உரிமை யாகற்பாலது***" என்று கூறி, அடிகளை வாழ்த்தினர். பிற அடியார்களும் புலவர்களும் சிவஞானமாபாடிய விரிவுரையைக் கேட்டுத் தாம் செவியினாலடையத்தகும் பெரும்பயன் பெற்றதாகக் கூறிப் பெருமகிழ் வடைந்தார்கள்.*

*சில நாட்கள் சென்றபின் அடிகள், ஞானாசிரியரிடம் விடைபெற்றுத் திருவாவடுதுறையை விட்டுப் புறப்பட்டுத் தம்முடைய மாணவர்களுடன் காஞ்சி நகரத்திற்குச் சென்றனர். அங்கு ஏகாம்பரநாதரையும், காமாட்சியம்மையாரையும் வழிபட்டுக் கொண்டும், தம்முடைய மாணாக்கர்களுக்குச் சைவசித்தாந்த நூல்களை அறிவுறுத்திக்கொண்டும், அவர் சில காலம் சிவத்தொண்டாற்றிக்கொண்டு வந்தனர்.*

*அக்காலத்தில் திருவாவடுதுறையிலிருந்து, முதலாவது ஆசிரியர் பின்வேலப்ப தேசிகர், தென்னாட்டுத் திருப்பதிகளின் வழிபாட்டிற்காகத் திருப்பெருந்துறைக்குச் சென்றிருந்த பொழுது அங்கே இறைவன் திருவடிநீழலை யடைந்தார். அப்பொழுது அவருடனிருந்த இரண்டாவது ஆசிரியர் திருச்சிற்றம்பல தேசிகர் அவருக்குச் செய்யவேண்டிய சைவச் சடங்குகளையெல்லாம் செய்து முடித்தபின், திருவாவடுதுறைக்கு வந்து, அம்பலவாணத் தம்பிரானுக்குத் தமக்கடுத்த இரண்டாவது ஆசிரியர் பட்டமளித்தருளினர்.*

*அவ்விழாவினைக் காணச் சிவஞானமுனிவர் காஞ்சியிலிருந்து திருவாவடுதுறைக்கு வந்து ஆசிரியர்க ளிருவரையும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு மீளவும் காஞ்சியை அடைந்தனர்.*

*அடிகள் காஞ்சிபுரத்திலிருந்தபொழுது மார்கழித் திருவாதிரை விழா வந்தது. அவ்விழாத் தொடங்கி முடியும் வரையும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவைப் பாக்கள் தவிர ஏனைய தேவாரம் முதலிய ஐந்து திருவருட்பாக்களும் காப்பிடப் பெற்றுத், தன் பொருட்டு (ஆன்மார்த்த) வழிபாட்டிலும், சிவன் திருக்கோயில் வழிபாட்டிலும் ஓதாதிருக்கப் படுதலையும், நாடோறுந் திருத்தொண்டர் பெயரை மந்திரமாக ஓதி வழிபடுவார்க்கு அவ் விழாநாட்கள் ஒரு தடையாயிருத்தலையும் அடிகள் அறிந்து, "***திருத்தொண்டர் திருநாமக்கோவை***"யென்ற பெயரால் ஒரு நூல் பாடியருளினர்.*

*திருவாவடுதுறையில் ஞானாசிரியராகிய திருச்சிற்றம்பல தேசிகர்பால் மூவகைத் தீக்கையும் பெற்றுத் துறவுநிலையையடைந்த கச்சியப்பத் தம்பிரானும், சுப்பிரமணியத் தம்பிரானும் சிவஞான அடிகளையுடைய நுண்ணறிவுத் திறனைக் கேள்வியுற்று, அவரிடம் இலக்கண நூல்களையும் சைவசித்தாந்த நூற் பொருளையும் கேட்க மிக்க அவாவுடையவர்களாய்க் காஞ்சிபுரத்துக்கு வந்து, அடிகளை வணங்கித் தங்களுக்கு மெய்யறிவு நூற்பொருளை உணர்த்தும்படி குறையிரந்தனர். அவர்களது வேண்டுகோளைக் கேட்ட அடிகள், அவர்களுக்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தையும், சைவசித்தாந்த நுண்பொருள்களையும் கற்பித்துத் தாமியற்றிய சிவஞானபோத மாபாடியத்தையும் விளக்கிப் பாடஞ் சொல்லியருளினர்.*

*பின், அடிகள் தம்மாணாக்கர்களுடன் காஞ்சியை விட்டுப் புறப்பட்டுப் பல சிவப்பதிகளை வணங்கிக்கொண்டு, திருமுல்லைவாயிலை அடைந்து சிலநாள் அங்கு வதிந்திருந்தனர். அப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற மாசிலாமணிப் பெருமானை வணங்கி, அவர்மீது* **'வடதிரு முல்லைவாயில் அந்தாதி'** *என்ற ஒரு நூலை அவர் பாடினர்.*

*பின்பு அவர் அருகிலுள்ள குளத்தூருக்குச் சென்று, அப்பதியில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சோமேசர்மீது,* **"குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி"** *என்ற நூலைப் பாடினதுமன்றி, திருக்குறளிலுள்ள நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களில், ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள பத்துப்பாட்டுக்களில் ஒரு பாட்டைப் பின் இரண்டடிகளாக அமைத்து, முதலிரண்டடிகளிலும் அக்குறட் கருத்து விளங்க ஒருவரலாறு குறித்தமைத்து,* **"சோமேசர் முதுமொழி வெண்பா"** *என்ற ஒரு நூலையும் இயற்றியருளினர். மேலும், அக் குளத்தூர் அமுதாம்பிகை யம்மையார் மீது பிள்ளைத்தமிழொன்றும் பாடியருளினர்.*

*பின், அவர், இளங்காடு என்ற திருப்பதிக்குச் சென்று அவ்வூர் இறைவன் மீது,* **'இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி'** *என்ற நூல் ஒன்று பாடி அவ்விறைவனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, பல திருப்பதிகட்கும் சென்று வழிபாடு செய்து, காஞ்சிமாநகரம் வந்து சேர்ந்தார். அங்கு அடிகள் ஏகாம்பரநாதரைப் பணிந்து* **'கம்பரந்தாதி'** *என்ற நூலையும்* **ஆனந்தக்களிப்பையும்** *பாடி முடித்தார். இன்னும் அவர்* **காஞ்சிபுராணம்** *முதலாவது காண்டத்தையும், ஆனந்தருத்திரேசர்மீது* **'கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்'** *என்ற நூலையும் இயற்றியருளினர்.*

*காஞ்சிப்புராணத்தை அடிகள் அந்நகரில் கூடிய ஒரு புலவர் பேரவையில் அரங்கேற்றிய காலத்தில், புலவர் பலர், "நீர் பாடிய காஞ்சிப்புராணத்தின் கடவுள்*

*வாழ்த்தில், அத்தலக்கடவுளாகிய ஏகாம்பரநாதர் பேரில் முதற்கண் காப்புச் செய்யுள் பாடாது கூத்தப்பிரானைப் பாடியது என்னை?" என அடிகளை வினாவினர். அடிகள் அவர்களுக்குத் தக்கவாறு அறிவுறுத்தவேண்டி, அந்நகர் ஓதுவார் சிலரை வரவழைத்து, அவர்களைக் காஞ்சிபுரத் தலத் தேவாரப் பதிகத்தைப் பாடும்படி பணித்தனர். ஓதுவார் முதற்கண் '**திருச்சிற்றம்பலம்**' என்று சொல்லித் தேவாரப் பதிகத்தின் முதற்பாட்டைப் பாடத் தொடங்கினர். அதனை அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அடிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் ஓதுவாரைத் தடுத்து நிறுத்திப் புலவர்களைப் பார்த்து, "இத்தலவோ துவார் இத்தலத்துக் கேற்பப் 'பிருதிவியம்பலம்' என்று சொல்லித் தேவாரம் தொடங்காமல் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்குகின்றார். அது நுங்கட்குச் சம்மதந்தானா?" என்று வினாவினார். உடனே புலவர்கள் நாணமுற்றுத் தலைகுனிந்து அவையைவிட்டு நீங்கினர். அடிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் காஞ்சிப் புராணத்தின் இரண்டாவது காண்டத்தைப் பாடி அந்நூலை முற்றுவித்தார். நிற்க,*

*அப்பொழுது தொட்டிக்கலையில் பெருஞ் செல்வமுடையவராய் வாழ்ந்து வந்த கேசவ முதலியார் என்பார் காஞ்சிபுரத்துக்கு வந்து அடிகளை வணங்கித் தமதூருக்கு வந்து சிலகாலந் தங்கியிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அடிகள் அதற்கிசைந்து தம்முடைய மாணாக்கர்களுடன் தொட்டிக்கலைக்குப் போயினர். ஆங்கு, கேசவ முதலியாரின் வேண்டுகோட்கிணங்கி, அப்பதியில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் சிதம்பரேசுரர்மீது "**கயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி**" என்ற ஒரு நூலையும், அவ்வூர்ப் பிள்ளையார்மீது "**செங்கழுநீர்ப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ்**" என்ற நூலையும் பாடினர். அப்பிள்ளைத்தமிழின் காலம் ஆங்கில ஆண்டு கி.பி. 1762-க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1684 - என்பது அந்நூலிற்கண்ட:*

*"இலகுசக னீரெட்டு நூற்று நாற்பத்தேழி னிற்கரங் கும்பமிருபத்*
*தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதியை யேர்க்கவுல வஞ்சுப்பிரம்*
*கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற் கலைசைப் பதிக்குள்வாழ்செங்*
*கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க் கவிபாடி வானோருண*
*அலைமலிக டற்கடைந் தமுதூட்டு மாலென்ன வவனியிற் புலவர்செவியா*
*லார்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிக னரங்கேற்றி னானாதலால்*
*நலசுகுண மணிகுவளை யணிபுயன் வீரப்ப னல்குமக ராசயோக*
*னங்கள்கே சவபூப னநுசர்சேய் சுற்றமு நன்மைதரு வாழ்வுறுகவே"*

*என்ற பாயிரச் செய்யுளால் தெரியவருகிறது.*

பின்பு, அவர் கலைசையிலிருந்து திருவாவடுதுறைக்குச் சென்று, அங்கே திருமடத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற சிவப்பிரகாசப் பிள்ளையாரையும், திருமாளிகைத் தேவரையும், ஆதீன முதலாசிரியராகிய நமச்சிவாய மூர்த்தியையும் வணங்கித் திருவருள் பெற்றுக்கொண்டு ஞானாசிரியராகிய திருச்சிற்றம்பல தேசிகரையும் வணங்கி அடியார்களோடு கூடிக்குலாவி வாழ்ந்திருந்தனர்.

முடிவில் அவர், மெய்கண்டான் யாண்டு - 562-க்குச் சரியான கி.பி. 1785-ல் (சாலிவாகன சகாப்தம் 1708) சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நாளிலே சிவபெருமானுடைய திருவடி நீழலில் இரண்டறக் கலந்து நிலையான பேரின்ப வாழ்வில் வீற்றிருப்பாராயினார்.

இதுகாறுங் கூறியவாற்றால் சிவஞான முனிவர் தமிழ்நூல்களையும் வடமொழி நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரும் புலவராய் விளங்கித் தமது புலமையின் பயனாகத் தமிழ் நூல்கள் இயற்றி வெளியிட்டுப், பொதுவாக உலகிற்கும் சிறப்பாகத் தமிழுலகிற்கும் பேருதவி புரிந்தனர் என்பது நன்கு விளங்கும்.

ஒரு மொழியின் வளம், கருத்து வளத்தினாலும் அதனோடு சேர்ந்து பிரியாது அதற்குத் துணையாயிருக்கின்ற சொல்வளத்தினாலும் உள்ளதாகும். சொற்கள் ஒரு மொழியில் திருத்தமாக அமையாவிட்டால், கருத்துக்களுந் திருத்தமாக விளங்கா. அடிகள் தமிழ்மொழியின் சொற்களை வளப்படுத்தும் பொருட்டுத் தாமே பல இலக்கிய நூல்களை இயற்றினதுமன்றி, முன்காலத்திலிருந்து தம்முடைய காலத்தில் வழங்கப்பட்டு வந்த இலக்கணவுரையாசிரியர்கள் உரைகளையும் படித்து, அவற்றில் காணப்படுவனவாகிய ஐயப்பாடுகளையும் வழுக்களையும் விளக்கித் திருத்தியருளினர். மேலும் வடமொழியிலிருந்து சில சமயநூல்களையும், தருக்க நூலையும் தமிழில் மொழிபெயர்த்தும் தமிழ்மொழியை வளப்படுத்தினர். சிறப்பாக அவர் சைவசமய நூல்களைப் பற்றிச் சைவப்பெரியார் பலரால் எழுதி வழங்கப்பட்டு வந்த பல தத்துவக் கொள்கைகளையும், சமயக்கொள்கைகளையும் நன்கு துருவி ஆராய்ந்து அவற்றிலுள்ள ஐயப்பாடுகளை எடுத்துக்காட்டியும் வழுக்களை நீக்கியும் அவர் சைவ உலகத்திற்குச் செய்த பேருதவி பெரிதும் போற்றற்பாலது. அவர் எழுதிய சிவஞானபோதச் சிற்றுரையும், சிவஞானசித்தியாரின் பொழிப்புரையும், சிவஞானமாபாடியமும், அவர் காலத்துள்ள சைவர்களும், பிற்காலத்துள்ள சைவர்களும் கற்றுச் சைவசமயத்தின் அரிய உண்மைகளை அறிந்துகொள்வதற்குப் பெரிதுந் துணையாயிருக்கின்றன.

அடிகள், சைவசமயத்தைப் பற்றியும் சைவசித்தாந்தத்தைப் பற்றியும் எழுதிய நூல்களின் துணையின்றி இக்காலத்திலுள்ள சைவநன்மக்கள் சைவசமய உண்மையை விளக்கமாக அறிந்து கொள்ளவியலாது. அடிகள் செய்த நூல்கள்

எல்லாவற்றினும் தலைசிறந்து விளங்குவது சிவஞானபாடியம். சைவ உலகிற்கு உதவியாகும் பொருட்டு அடிகள் செய்த சிவஞானமாபாடியம் சைவமக்களுடைய தவக்குறைவினால் நீண்ட காலமாகத் திருவாவடுதுறை மடத்தை விட்டு வெளிவாராதிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்புதான் சைவநன்மக்கள் சிலருடைய பெருமுயற்சியால் அந்நூல் வெளிவந்தது. அதனாலேதான், இப்பொழுது சைவசமய மாணவர்களெல்லோரும் அதனைப் படிக்குந் தவப்பயனுடையவர்களா யிருக்கின்றார்கள்.

வடமொழியில் மாபாடியம் இயற்றியருளிய பெரியார் நால்வர். அவர்கள், நீலகண்ட சிவாச்சாரியார், சங்கராச்சாரியார், இராமாநுசாச்சாரியார், மாத்துவாச்சாரியார். இந்த **நான்கு பெரியார்களும் வேதவியாசமுனிவர் செய்தருளிய பிரமசூத்திரத்திற்குப் பாடியம் செய்திருக்கின்றனர். நீலகண்ட பாடியம் வேதாகமங்களைத் தழுவிச் சைவசமயத்தைச் சார்ந்த சிவாத்துவிதக் கொள்கையை விளக்குவது. சங்கராச்சாரியார், இராமாநுசாச்சாரியார், மாத்துவாச்சாரியார்** ஆகிய இம்மூன்று பெரியார்களுமே சிவாகமங்களைப் பொருட்படுத்தாது பிரமசூத்திரம், வேதோபநிடதங்கள், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களையும் மேற்கோள்களாகக் கொண்டே வெவ்வேறு காலத்தில் ஒன்றோடொன்று முரண்படும் **கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவைதம்** ஆகிய தங்கள் தங்கள் கொள்கைகளை முறையே கூறியருளினர்.

ஆனால், நம் சிவஞான அடிகளோ மும்மலங்களினீங்கி மெய்யுணர்விற் றலைப்பட்ட மெய்கண்டதேவர், சைவசித்தாந்த சுத்தாத்துவைத உண்மையை நிலைநாட்டி ஞானபாத நூலாகச் செய்தருளிய சிவஞானபோத நூலிற் கூறப்பட்ட உண்மைகளை விளக்கித் தமது மெய்யுணர்வின் பயனாக மாபாடியம் செய்தருளினர். அச்சிவஞானபோதத்திற் கண்ட உண்மைகளை வற்புறுத்தி, அவர் வேத நூல்களிலிருந்தும் சிவாகம நூல்களிலிருந்தும் மெய்கண்ட தேவரின் முதன் மாணவராகிய அருணந்தி சிவாச்சாரியார் வழிநூலாக இயற்றிய சிவஞானசித்தியார், இருபாவிருபஃது நூல்களிலிருந்தும் உமாபதி சிவாச்சாரியாரியற்றிய சிவப்பிரகாசம் முதலிய தமிழ்நூல்களிலிருந்தும், சைவப்பெரியார் பலர் வடமொழியிலியற்றி யருளிய இரத்தினத்திரயம், சிவதத்துவ விவேகம், பௌட்கரவிருத்தி முதலிய நூல்களிலிருந்தும் திருக்குறள், நாலடியார் முதலிய தமிழ் அறநூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றனர். இன்னும் அடிகள் தமது பாடியத்தில் சங்கராச்சாரியாரின் கேவலாத்துவிதக் கொள்கையையும், இராமாநுசாச்சாரியாரின் விசிட்டாத்துவிதக் கொள்கையையும், மாத்துவாச்சாரியாரின் துவைதக் கொள்கையையும், அவர்கள் தங்கள் தங்கள் பாடியங்களிற் கூறுகிறபடி எடுத்துக்கூறி, அவற்றையெல்லாம் அளவை நூன்முறைமைப்படி உண்மைக்குப் பொருந்துவன வல்லவென்று மறுத்து, அம்மூன்று கொள்கைகளையும் அடிப்பகுதியில் தன்னகத்தே கொண்டு, அவற்றிற்கு

வேறாய் மேம்பட்டு விளங்கும் சைவசித்தாந்த சுத்தாத்துவிதக் கொள்கையை நிலைநாட்டியுள்ளனர். இன்னும் அடிகள் நமது இந்தியநாட்டுத் தத்துவக் கொள்கைகளாகிய பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை, சாங்கியம், யோகம், வைசேடியம், நியாயம் என்ற ஆறு கொள்கைகளையும் அவை ஒவ்வொன்றும் சைவசித்தாந்தத்தோடு முரணுமிடங்களில் மறுத்துத் தமது சித்தாந்தத்தை நிறுவிக் கூறியுள்ளார். அகச்சமயங்களுளொன்றாகிய சிவாத்துவித சைவக் கொள்கை பெரிதும் சைவசித்தாந்தத்திற்கு ஒத்திருப்பினும், சிறுபான்மை முரணுவதா யிருப்பதால், அதனையும் ஏனைய அகச்சமயக் கொள்கைகளைப் போலவே தமது நூலில் மறுத்திருக்கின்றார்.

அடிகள் பிற்காலத்துள்ளவர்கள் தமிழ்மொழியில் சமய நூல்களின் உண்மையை விளக்கி உரைநடையில் எழுதுவதற்கும், இலக்கண இலக்கிய விளக்கக் கண்டனம் பிறர்க்கறிவுறுத்து முறையில் எழுதுவதற்கும், தமிழ்ச் செய்யுளியற்று வதற்கும், தமிழ் உரைநடை நூல்கள் எழுதுவதற்கும் ஒரு பெரிய எடுத்துக்காட்டாசிரியராக விளங்குகின்றார். அடிகள் எழுதிய இலக்கண நூலையும் தருக்க நூலையும் சிவஞானபோதச் சிற்றுரை பேருரை நூல்களையும் படியாது, இக்காலத்திலுள்ளார் சைவநற்புலவராய் விளங்குதல் இயலாது.

அடிகளிடத்திற் கல்விபயின்ற மாணவர் பலர். அவர்களிற் சிறந்த மாணவராகக் கூறப்படுபவர்கள் திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிச் சிதம்பர முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர், காஞ்சி முத்துக்குமாரசாமி தேசிகர், காஞ்சிச் சரவணபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரப் பிள்ளை, திருமுக்கூடல் சந்திரசேகர முதலியார், கரவாந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார், கடம்பார் கோயில் கலியாணசுந்தர உபாத்தியாயர் முதலிய பன்னிருவராவர்.

அடிகள் பலதுறைகளிலும் சிறந்த புலமை எய்தி இயற்றிய நூல்களின்தொகை இருபத்தொன்பது. அவையாவன:-

## இலக்கணம்

1. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
2. இலக்கண விளக்கச் சூறாவளி
3. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்.

## இலக்கியம்

1. காஞ்சிப்புராண முதற்காண்டம்
2. சோமேசர் முதுமொழிவெண்பா

3. குளத்தூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி
4. இளசைப் பதிற்றுப்பத் தந்தாதி
5. கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதி
6. கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்
7. திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு
8. கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்
9. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
10. இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி பதிகம்
11. திருவேகம்பரந்தாதி
12. திருமுல்லைவாயிலந்தாதி
13. திருத்தொண்டர் திருநாமக்கோவை
14. பஞ்சாக்கரதேசிகர் மாலை
15. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி

## தருக்கம்

1. தருக்கசங்கிரகமும் அன்னம்பட்டீயமும்

## சமயம்

1. சிவஞானபாடியம்
2. சிவஞானபோதச் சிற்றுரை
3. சிவஞானசித்திப் பொழிப்புரை (சுபக்கம்)
4. சித்தாந்தப் பிரகாசிகை
5. என்னை யிப்பவத்தில் என்னும் செய்யுட் சிவசமவாதவுரை மறுப்பு
6. எடுத்து என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்
7. சிவசமவாத வுரை மறுப்பு
8. அரதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு
9. சிவதத்துவவிவேகம்
10. சித்தாந்த மரபு கண்டனக் கண்டனம் முதலியன.

இவற்றுள், இலக்கிய நூல்களில், 'காஞ்சிப்புராணம்' தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகும். 'தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம்' 'சித்தாந்தப் பிரகாசிகை' 'சுலோக பஞ்சகம்' 'சிவதத்துவவிவேகம்' என்ற நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களே.

## 1936ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிவஞானபோத நூலுக்குத் திரு.வி.க. அவர்கள் அருளிய அணிந்துரையின் மைய, நிறைவுப் பகுதிகள்

*நம் குருநாதர் சென்னியப்பனார் ஐயா அவர்கள் சிவஞானபோதத்தைப் பற்றி நம்மிடம் உரையாடும்போதெல்லாம் 1936ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிவஞானபோத நூலுக்குத் திரு.வி.க. எழுதிய அணிந்துரையின் முக்கிய பகுதிகளைக் குறிப்பாக நிறைவுப் பகுதியைச் சுட்டிக் காட்டியே உரைநிகழ்த்துவார். திரு.வி.க. அவர்களின் அணிந்துரையின் மையத்தின் முக்கிய பகுதிகளையும், பின் நிறைவுப் பகுதியையும் முதலில் பதிப்பித்துப் பின்னர் அணிந்துரை முழுமையும் பதிப்பு பதிப்பிக்கிறோம்.*

- *சிவஞான முனிவர் அறிவுப் பிண்டம்*
- *தருக்கமும், வியாகரணமும், இலக்கியமும், இலக்கணமும் தமிழ்ச்சிவஞான முனிவருக்குப் பணியாட்களாகித் துணை புரியத் தவம் கிடந்தன.*
- *சைவ சித்தாந்த நுட்பங்களை அவர் விளக்கியதை எச்சொல்லால் சொல்வது? எவ்வெழுத்தால் எழுதுவது?*
- *சிவஞான முனிவர் வடமொழிக்கடலையும், தென்மொழிக் கடலையும் உண்ட பெருங்கொண்டல் (மேகம்)*
- *அக்கொண்டல் பொழிந்த மழையின் தேக்கம் சிவஞான போதம்*
- *சிவஞான யோகிகளின் தத்துவ ஆராய்ச்சி நுட்பத்தை நோக்கும்போது, நீலகண்டரும், சங்கரரும், இராமனுசரும், மத்துவரும் ஓர் உருக்கொண்டு சிவஞான முனிவராக வந்தனரோ என்றும்,*
- *அவர்தம் தமிழ் நடையை நோக்கும்போது நக்கீரரும், இளம்பூரணரும், பரிமேலழகரும், நச்சினார்க்கினியரும் ஓர் உருக்கொண்டு அவராகச் சேர்ந்தனரோ? என்றும் அறிஞர் கருதற்கு இடன் உண்டாகிறது.*

*சிவஞானபாடியம் தத்துவ ஆராய்ச்சிக்கு ஒரு கருவூலம் போலத் துணைபுரியும்; தமிழ் பயில்வோர்க்கும் அவ்வாறே துணைசெய்யும். சிவஞானபாடியம் தமிழ்ச் செல்வம்;* ***கற்பகம்****; காமதேனு. அது வேண்டுவதை உதவும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த திராவிட மாபாடியம் ஒவ்வொரு தமிழர் இடத்திலும் மிளிர்தல் வேண்டும் அன்றோ? தமிழ் வாழ்க; சிவநெறி வாழ்க; சிவஞான முனிவர் சேவடி வாழ்க.*

# திரு.வி.க. அவர்களின் அணிந்துரை

**உ**லகு உயிர் கடவுள் என்னும் மூன்றும் என்றும் இருப்பன. உலகு மாறுதல் அடையும் உள்பொருள். உயிர் அறியாமை விரவிய அறிவு ஆகிய உள்பொருள். கடவுள் அறியாமையே இல்லாத முற்றறிவு உடைய உள்பொருள். இம் மூன்றனுள், கடவுள் கட்டு இல்லாத முற்றறிவு உடையது ஆகலின், அஃது அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கம் அற நிறைந்தும் எல்லாவற்றையும் கடந்தும் நிற்கும் தன்மை உடையது. எங்கும் உள்ள கடவுளை விடுத்து உலகும் உயிரும் பிரிந்து தனித்து நிற்பது இல்லை. இரண்டும் கடவுளின் அகண்டத்தில் (முழுமையில்)* கலந்தே நிற்கும்.

உயிருக்கு உலகும் கடவுளும் வேண்டும். கடவுளுக்கு உலகும் உயிரும் வேண்டும். உலகும் உயிரும் இல்லையேல் கடவுளும் வேண்டுவது இல்லை. உலகைக் கொண்டே கடவுள் உயிருக்கு நலன்செய்து உயிரைத் தன்னைப் போல் ஆக்குதல் வேண்டும். முப்பொருளும் இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று இன்றியமையாதனவாய் இருத்தல் கருதற்பாலது.

பண்டை நாளில் வாழ்ந்த மக்கள் முதலிய உலகு உண்மையையும், பின்னே உயிர் உண்மையையும், அதற்குப் பின்னே கடவுள் உண்மையையும் படிப்படியாகக் கண்டிருப்பார்கள். இம் முப்பொருளுள் எங்கும் உள்ள கடவுள், உலகு உயிரில் கலந்து நிற்றலை அவர்கள் நாளடைவில் உணர்ந்திருப்பார்கள். இக் கலப்பே பின்னை நாளில் அத்துவிதம் என்று சொல்லப்பட்டது.

முப்பொருளைப் பற்றியும் அத்துவிதத்தைப் பற்றியும் ஆராய்ச்சி முதிர முதிரப் பலதிறக் கருத்து வேற்றுமைகள் தோன்றின. அவைகளில் பல, நூல்கள் ஆகி உலவுகின்றன. அந்நூல்களால் சில சமயம் நலனும், சில சமயம் தீங்கும் விளைகின்றன. காய்தல் உவத்தல் அகற்றி நடுநின்று உண்மை காணும் நோக்குடன் நூல் ஆராய்ச்சி செய்வோர்க்கு நற்பயன் விளையும். மற்றவர்க்குத் தீப்பயன் விளையும்.

தத்துவ விதை முதல் முதல் நமது நாட்டில் விதைக்கப்பட்டது. இவ் உண்மை சரித்திரக் கண்ணர்க்கு நன்கு விளங்கும். மிகமிகப் பழைய காலத்தில் - அதாவது சரித்திரக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் - நமது நாடு நாவலந்தீவு என்ற பெயர் பெற்று இருந்தது. அத்தீவில் வாழ்ந்த மக்களில் ஆத்ம

---

* அருஞ்சொற்களுக்குப் பக்கத்தில் அடைப்பில் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. படிப்போர்க்கு விளங்கும் வகையில் சொற்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

சக்தி (Occult Power) பெற்றவர் 'சித்தர்' என்று அழைக்கப்பட்டனர். அவர் கண்ட முடிபே சித்தாந்தம் என்பது. இது குறித்துச் "சித்த மார்க்கம்" என்னும் நூலில் சிறிது விரித்துக் கூறியுள்ளேன்.

சித்த மார்க்கம் ஆகிய சித்தாந்தம் ஒருபோது உலக முழுவதும் பரவி இருந்தது. இந்நாளில் உலகிடை நிலவும் சமயங்கள் யாவும் சித்தாந்தத்தின் சிதைவு (சிதறல்)களேயாம். சிதைவுகள் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு விதப் பெயர் தாங்கி நிற்கின்றன.

சித்தாந்தம், இடைநாளில் தான் பிறந்த நாட்டிலேயே வடக்குப்பகுதியில் "வேதாந்தம்" என்றும், தெற்குப் பகுதியில் "சித்தாந்தம்" என்றும் வழங்கல் ஆயிற்று. பின்னே இரண்டும் வெவ்வேறாகக் கருதப்பட்டன. வேற்றுமை உணர்வால் வாதப்போர்களும் நிகழ்ந்தன.

நமது நாட்டு மொழிகளுள் தொன்மை வாய்ந்தன இரண்டு. ஒன்று வடமொழி; இன்னொன்று தென்மொழி. முன்னையதில் உள்ள நூல்களில் பழமையது வேதம். பின்னையதில் உள்ள நூல்களில் பழமையது தொல்காப்பியம். பழைய 'இருக்'கில் (வேதம்) இயற்கைக் கூறுபாடுகளும், உயிர் வளர்ச்சியும், கடவுள் இயல்பும் பேசப்பட்டு இருத்தலும், தொல்காப்பியப் பொருள் - அதிகாரத்தில் இயற்கை நிலக் கூறும் இன்பமும், ஓர் அறிவு உயிர் முதலியனவும், கந்தழிக் கடவுள் நிலையும் பேசப்பட்டு இருத்தலும் வெள்ளிடை மலை.

வடமொழி வேதம் நாளுக்கு நாள் பெருகல் ஆயிற்று. அதன் கண் புகுந்து உள்ள ஞானப்பகுதி ஆகிய உபநிடதம் - அதாவது வேதாந்தம் - மன்பதையை (உலகை)யே கவர்ந்தது. வேதாந்தம் கடல்போலப் பெருகிற்று என்றும் கூறலாம். அக்கடலில் பலர் படிந்து ஆழம் காண்டல் அரிது ஆயிற்று. அவ் அருமை போக்க வியாச முனிவர் முயன்றார்; முயன்று வெற்றியும் பெற்றார்.

வியாச முனிவர் தமது நுண் அறிவால் வேதாந்தக் கடலைக் கடைந்து வேதாந்த சூத்திரம் என்னும் அமுதை உலகுக்கு உதவினர். வேதாந்த சூத்திரத்துக்குப் 'பிரம சூத்திரம்' என்று வேறு ஒரு பெயரும் உண்டு. இச்சூத்திரத்துக்குப் பாடியங் (அகல உரை)கள் அறிஞரால் வரையப்பட்டன.

பாடியங்கள் தோன்றுவதற்கு முன்னர் வேதாந்தம் ஒருமை நோக்குடன் அறிஞரால் கொள்ளப்பட்டு வந்தது. பாடியங்கள் தோன்றிய பின்னர் வேதாந்தத்தின் ஒருமை நோக்கு நாளடைவில் பாழ்படல் (கேடுறுதல்) ஆயிற்று. சிவாத்துவிதம் என்றும், கேவலாத்துவிதம் என்றும், விசிஷ்டாத்துவிதம் என்றும், துவிதம் என்றும்,

பிற என்றும் வேதாந்த உலகில் கவடு கோடுகள் (கிளைகளும் கொம்புகளும்) முளைத்தன; அவைகளின் மீது செடி கொடிகளும் தூறு (புதர்)களும் படர்ந்தன.

பாடியக்காரர்கள் பெயரால் மடங்களும் சம்பிரதாயங்களும் (தொன்று தொட்ட வழக்கங்கள்) காணப்பட்டன. அவைகளை ஒட்டி வாதப் போர்களும் பிணக்கு (மாறுபாடு)களும் வீறிட்டு எழுந்தன. மூலத்தின் ஒருமை, மக்களின் உள்ளமாம் அரியாச (சிங்காத)னத்தினின்றும் இழிந்து வீழ்ந்தது. உரைகளின் பன்மை அங்கே இவர் (உயர்)ந்து ஆட்சி புரியல் ஆயிற்று.

பாடியங்கள் வரைந்த பெரியோர்கள் மீது பழி சுமத்துவது அறியாமை. அவர்கள் கருணை மேலீட்டான் அவ்வக் காலத்துக்கு ஏற்றவாறு பாடியங்கள் வரைந்தார்கள். பாடியங்களை ஒட்டிக் காணப்பெற்ற மடங்களும் சம்பிரதாயங்களுமே பழிக்கு உரியனவாம்.

உயர்திணை - உலகம் என்றும் ஒரு பெற்றியாய் இராது. அதன் கண் கருத்து வேற்றுமை நிகழ்வது இயல்பு. சிற்சில சமயம் மூன்று பொருளில் ஒன்றை விடுத்து மற்றொன்றை மன்பதை கொள்ளும். அதனால் வாழ்வும் குலையும். அவ்வந் நேரத்தில் சான்றோர் தோன்றி மன்பதை விடுத்த ஒன்றை வலியுறுத்திச் செல்வர்.

ஒருபோது நமது நாட்டவர் உலகை மறந்து, வாழ்வை வெறுத்துக் கடவுள் பெயராலும், வேதத்தின் பெயராலும் கொலை வேள்வி (யாகம்) புரிவதில் கருத்துச் செலுத்தினர். கொலை வேள்வியால் எளிதில் வீடுபேறு எய்தலாம் என்னும் உறுதி மக்களிடைப் பசுமரத்து ஆணிபோல் பாய்ந்து நின்றது. அந்நாளில் புத்தர் பெருமான் தோன்றி, உலகியலின் பெருமையைப் புலப்படுத்திக் கொல்லா அறத்தின் விழுப்பத்தை (சிறப்பை) உயிர்கட்கு அறிவுறுத்தினர். கடவுள் கடவுள் என்று வாயால் பேசி, வெறி கொண்டு தீச்செயல் புரிந்து வந்த மக்கட்குக் கடவுள் உபதேசம் செய்யப் புத்தர் பெருமான் முந்தினார் இல்லை. அக்காலப் போக்கிற்குக் கடவுள் உபதேசம் அநாவசியம் (தேவை அற்றது) என்று புத்தர் பெருமான் கருதினர் போலும்!

காலநிலை நோக்கிக் கடவுள் உண்மையை வலியுறுத்தாது புத்தர் பெருமான் சென்றமையால், அவர் வழிவழி வந்த சிலர் அறநெறி நிற்பதில் கருத்துச் செலுத்தாது கடவுள் உண்மையை மறுப்பதில் மட்டும் கருத்து இரு(செலு)த்துவார் ஆயினர். அவர்தம் பிரசாரத்தால் யாண்டும் நாத்திகம் பரவல் ஆயிற்று. அதைக்கடிய (விலக்க)ச் சங்கரர் தோன்றினர். அதை அவர் எவ்வாறு கடிந்தனர்?

புத்தர் பெயரால் சடத்தின் உண்மை மட்டும் வலியுறுத்தப்படுதலையும், அறிவு ஆகிய கடவுள் உண்மை மறுக்கப்படுதலையும் சங்கரர் கண்டார்; மக்கள்

*உள்ளத்தில் அறிவு ஆகிய கடவுள் உண்மை உலவாது, சடத்தின் உண்மை மட்டும் உலவியதால், மக்கள் மனோநிலையை மாற்ற வேண்டி, அறிவு ஆகிய கடவுள் ஒன்றே உண்மை என்றும், அறிவுக்கு வேறாகப் பிற பொருள் இல்லை என்றும் அறிவுறுத்தப் புகுந்தார்; அந்நோக்குடன் பாடியமும் வரைந்தார். காலத்துக்கு ஏற்ற தொண்டு சங்கரரால் செய்யப்பட்டது. அறிவு ஆகிய கடவுள் ஒன்றே என்னும் விழுமிய கருத்தில் உறைந்து (ஊன்றி) நில்லாது, அதற்கு வேறாகப் பிறபொருள் இல்லை என்பதில் மட்டும் உறைந்து நிற்க மக்கள் தலைப்பட்ட (முனைந்த)ார்கள். அதனால் சங்கரர் விவகார நிலையினர்க்கு இன்றியமையாதது என்று சொல்லியும் செய்தும் காட்டிய கடவுள் வழிபாட்டுக்கு இடர் நேர்ந்தது. அவ் இடரைப் போக்க இராமாநுஜர் போந்தனர். அவர் ஜகஜீவ பர (உலகு உயிர் கடவுள்) உண்மையை நிலைநாட்டி, ஆண்டான் அடிமைத் திறத்தை வலியுறுத்திக் கடவுள் வழிபாட்டின் அவசியத்தை உலகுக்கு உரைத்தனர். இவ் எடுத்துக்காட்டுகள், காலத்துக்கு ஏற்றவாறு ஆன்றோர் கருத்து வெளிவருதலை உணர்த்துதல் காண்க.*

*பாடியக்காரர் உள்ளக் கிடக்கைகளைச் சரித்திரக் கண் கொண்டு நோக்கினால் பிணக்குக்கு இடமே நேராது. மடங்களும் சம்பிரதாயங்களும் அறிவு விளக்கத்துக்குத் தோன்றவில்லை. அவை, பாடியக்காரர் பெயரால் கட்டுப்பாடுகளையும் மூடவழக்க ஒழுக்கங்களையும் வளர்க்கவே தோன்றின. கட்டுப்பாடுகளும் மூடவழக்க ஒழுக்கங்களும் அறியாமையைப் பெருக்கிப் பிணக்குகளை ஓம்பாது வேறு என் செய்யும்? முப்பொருளைப் பற்றியும் அத்துவிதத்தைப் பற்றியும் சொற்போரும் மற்போரும் ஆங்காங்கே நிகழ்ந்தன. உண்மை காணும் நன்முயற்சி எழவில்லை. எங்கணும் குழப்பம் குழப்பமே பெருகிற்று.*

*பொருள் - உண்மையைப் பற்றிக் குழப்பம் நிகழும்போது எல்லாம் பெரியோர் தோன்றுதல் மரபு. அம் மரபுப்படி ஒரு பெரியோர் தோன்றினர். அவரே மெய்கண்டார் என்பவர்.*

*மெய்கண்டார் வாயிலாகச் சிவஞான போதம் வந்தது. சிவஞான போதத்தின் வழியே சிவஞான சித்தி, சிவப்பிரகாசம் முதலிய நூல்கள் தோன்றின. இந்நூல்களால் குழப்பங்கள் எல்லாம் இரிந்து (அஞ்சி) ஓடின. முப்பொருள் உண்மையும், அத்துவித உண்மையும்,வேத வேதாந்தத்தின் உள்ளமும், வேதாந்த சூத்திரத்தின் உள்ளமும் மன்பதைக்கு நேரியமுறையில் புலன் ஆயின.*

*சிவஞானபோத வரலாறு நாட்டில் பலவிதமாக வழங்கப்படுகிறது. ஒன்றைப் பற்றிப் பலவிதக்கதைகள் கட்டுவது (பொய்யாகக் கற்பித்தல்) நாட்டவர் பழக்கம். கதைகள் தெய்வ உணர்ச்சியை எழுப்பும் என்பது நம்மவர் எண்ணம் போலும்.*

*சிவஞான போதத்தைப் பற்றி எழுந்த கதைகள் யாவும் தென்முகத் தெய்வத்தின் ஒரு திருக்கையில் சிவஞான போதம் இருப்பதைச் சொல்லாமல் போகவில்லை. இவ் ஒன்றை எல்லா கதைகளும் ஒரே முகமாக அறை (சொல்லு)கின்றன. இது சிந்திக்கற் பாலதே.*

*தென்முகத் தெய்வம் உலகில் உள்ள பழம் பெரும் சமயங்கட்கு எல்லாம் பரமாசா (மேலான ஆசி)ரியராக விளங்குவது. முன்னை நாளில் இவ் ஆசாரியருக்கே வந்தனை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இவரே தலைமைக் குரவர் (ஆசிரியர்) என்று தியொசாபிகல் (பிரம்ம ஞான) சங்கத்தைக் கண்ட பிளவட்ஸ்கி அம்மையாரும் தமது நூல்களில் வலியுறுத்தி உள்ளார்.*

*தென்முகத் தெய்வம் சாந்த (அமைதி) மயமாய் இருப்பது; சொற் பொருள் கடந்த நிலையில் சாந்தம் நிலவுவதை அறிவுறுத்துவது; 'சாந்தம் சாந்தம் சிவம்' என்னும் நுட்பத்தின் அறிகுறியாக விளங்குவது. அத்தெய்வத்தின் ஒரு திருக்கையில் சின் முத்திரையும், மற்றொரு திருக்கையில் சிவஞான போதமும் திகழ்கின்றன. பெருவிரலும் சுட்டு விரலும் ஒன்றி மற்ற மூன்று விரல்களும் சேர நிற்றலின் குறி சின்முத்திரையாம்.*

*சின் முத்திரை முப்பொருள் உண்மையைத் தெரிவிப்பது. பெருவிரல் - பதி; சுட்டு விரல் - பசு; மற்ற மூன்று விரல்கள் - மும்மலம் ஆகிய பாசம். பசு மும்மலங்களினின்றும் நீங்கிப் பதியுடன் சேர்தல் வீடுபேறு என்பது கருத்து. இவைகளின் உள்ளுறை சிவஞான போதம் என்பது. சின்முத்திரையும் சிவஞான போதமும் பொருளில் ஒன்றே. இரண்டும் இரண்டு கைகளாகச் சொல்லப்படுவது தத்துவம். பிற உறுப்புக்களும் தத்துவத்தின்பாற்பட்டனவே. விரிவு ஈண்டைக்கு இங்கு வேண்டுவது இல்லை.*

*தென்முகத் தெய்வத்தின் திருக்கையில் விளங்கும் சிவஞான போதம் அருள் நாதமயமாய் இருப்பது. நாதம் இருவிதம். ஒன்று மாயா நாதம்; மற்றொன்று அருள் நாதம். மாயா நாதம் மாயை வாயிலா (வழியா)கப் பிறப்பது. இஃது எல்லோர்க்கும் கேட்கும். அருள் நாதம் மாயா நாட்டம் கடந்தது; சாந்த சமாதி நிலையில் எழுவது; மெய் அறிஞர்க்கு மட்டும் புலன் ஆவது.*

*உலகம் நாம (பெயர்), ரூப (வடிவ)ங்களாகப் பரிணமித்து (மாறி) இருக்கிறது. நாம ரூபங்கள் பேத (வேறுபாடு) புத்தியை உண்டு பண்ணுவன. நாம ரூபங்கள் உள்ளவரை பேத புத்தி இருக்கும். பேத புத்தி உள்ள மட்டும் நாம ரூபங்கள் தோன்றும். நாமரூபங்கள் அழிந்தால் எல்லாம் ஒலிமயம் ஆகும். அந்நிலையில் பேதபுத்தி அழியும்.*

எல்லாம் ஒலி மயமாகப் புலப்படும் வேளையில் குருநாதன் காட்சி அளிப்பன்; சிவஞான போதத்தை உபதேசிப்பன். அவ்உபதேசம் ஒலி மயத்தை ஒளிமயமாகச் செய்து, சாந்தத்தையும் சொல்லொணா மேல் நிலையையும் கூட்டும். சிவஞான போத உபதேசம் பெற்ற பெரியோர் வழி வரி வடிவில் பரிணமிப்பது சிவஞான போத நூல்.

ஒலி வடிவில் மொழி வேற்றுமை கிடையாது. ஒலி, வரி வடிவம் பெறும்போது வேற்றுமை உணர்வு தோன்றுகிறது. நாம ரூபத்தில் வேற்றுமை விளைதல் இயல்பு. வேற்றுமை உணர்வை ஒழிக்கவே மக்கள் முயலல் வேண்டும். சிவஞான போதம் வேற்றுமை உணர்வை ஒழிக்க வல்லது.

மெய்கண்டார் தமிழர். அவர், குருநாதன் வாயிலாகப் பெற்ற சிவஞான போத உபதேசம், அவர் வழியாகத் தமிழ்ச் சிவஞான போத நூலாகத் திரண்டது. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது தமிழுக்கு உரிய சிறப்பு இயல்பு. தமிழ்ச் சிவஞான போதம் மிகச் சுருங்கிய நூல்; பன்னிரண்டு சிறு சிறு சூத்திரங்களால் ஆக்கப்பட்டது. சிறு நூல் பெரிய உலகையும், எண்ணிறந்த உயிரையும், எல்லை அற்ற இறையையும் காட்டுதல் வியப்பு அன்றோ? சிவஞான போதம் சுருங்கிய சொல்லும் பெருகிய பொருளும் உடையது. சிவஞான போதச் சொல் ஆலின் விதை போன்றது; அதன் பொருள் மரம் போன்றது.

சிவஞான போதத்துக்கு உரை பல உண்டு. அவைகளுள் சிறந்தது சிவஞான சுவாமிகள் உரை. சிவஞான சுவாமிகள் இருவித உரை இயற்றி உள்ளார். ஒன்று சிற்றுரை; வேறு ஒன்று பேருரை. பேருரை, சிவஞான பாடியம் என்றும் திராவிட மாபாடியம் என்றும் வழங்கப்படுகிறது. சிவஞான சுவாமிகள் உரை, சிவாக்கிர யோகியாரது வடமொழி உரையை ஒருபுடைத் (பக்கம்) தழுவியது.

மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் அக (உள்ள)த்தைத் திறந்து காட்ட வல்ல திறவு சிவஞான முனிவர் உரையே என்று கூறலாம். இவ் உண்மை, மூலத்தையும் உரையையும் ஒருங்கு வைத்து ஆராய்வோர்க்கு நன்கு புலன் ஆகும். சிவஞான முனிவர் நுண் உடல் கொண்டு மெய்கண்டாருடன் பேசிப் பேசி உரை வரைந்தனரோ என்று நினைக்குமாறு அவர்தம் உரை அமைந்து இருக்கிறது.

சிவஞான முனிவர் வடமொழிக் கடலையும் தென்மொழிக் கடலையும் உண்ட பெருங்கொண்டல் (மேகம்). அக்கொண்டல் பொழிந்த மழையின் தேக்கம் சிவஞான பாடியம். சிவஞான முனிவரது தத்துவ ஆராய்ச்சி நுட்பத்தை நோக்கும்போது நீலகண்டரும் சங்கரரும் இராமாநுஜரும் மத்துவரும் ஓர் உருக்கொண்டு சிவஞான முனிவராக வந்தனரோ? என்றும், அவர்தம் தமிழ் நடையை நோக்கும் போது

நக்கீரரும் இளம்பூரணரும் பரிமேலழகரும் நச்சினார்க்கினியரும் ஓர் உருக்கொண்டு அவராகப் போந்தனரோ? என்றும் அறிஞர் கருதற்கு இடன் உண்டாகிறது.

சிவஞான முனிவரை அறிவுப் பிண்டம் (தொகுதி) என்று கூறல் மிகை ஆகாது. கலைகள் எல்லாம் சிவஞான முனிவராகத் தோன்றின போலும். தருக்கமும், வியாகாரணமும், இலக்கியமும், இலக்கணமும் தமிழ்ச்சிவஞான முனிவருக்குப் பணியாட்கள் ஆகித் துணை புரியத் தவம் கிடந்தனவோ? என்னவோ? தெரியவில்லை.

சிவஞான போதத்துச் சிவஞான முனிவர் உரை, நிலனாய் நீராய்க் காற்றாய் ஒளியாய்த் துணைசெய்து வருகிறது. சிவஞான போதத்தைத் தழுவி, முப்பொருள் உண்மையையும், அத்துவிதத்தின் சிறப்பையும், பிற நுட்பங்களையும் சிவஞான முனிவர் விளக்கித் தெளிவு செய்து உள்ள பெற்றியை (இயல்பை) எச்சொல்லால் சொல்வது? எவ் எழுத்தால் எழுதுவது?

சிவஞான முனிவர் கருத்துக்கள் பல தற்கால விஞ்ஞான கலைக்கு அரண் செய்வனவாகத் திகழ்கின்றன. இனிவரும் தத்துவ உலகில் சிவஞான முனிவர் பாடியம், அரசு வீற்றிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. தற்காலச் சைவ உலகம் சிவஞான சுவாமிகளது பெருமையை உணராது கிட(இரு)ப்பது வருந்தத்தக்கது.

'உள்ளது போகாது இல்லது வாராது' என்பது பழமொழி. இது சத்காரிய வாதம் எனப்படும். சித்தாந்தம் சத்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. சத்காரிய வாதத்தின் வழி நின்று சிவஞான சுவாமிகள் சிவஞான போதத்துக்கு உரை கண்டு உள்ள மாண்பு போற்றற்கு உரியது.

கண்கூடாக விளங்கும் உலகு மாயா காரியம் ஆனது. மாயா காரியம் ஆகிய உலகு நாம ரூபங்களை உடைமையான் அது சுட்டி உணரப்படுவது ஆகிறது. சுட்டி உணரப்படும் ஒன்று என்றும் ஒரு தன்மையதாய் இராது. அஃது அழிதன் மாலையதே (இயல்பே). அழிவு எதற்கு? நாம ரூபத்துக்கா? மூலத்துக்கா? அழிவு நாம ரூபத்துக்கே உண்டு என்றும், மூலத்துக்கு இல்லை என்றும் விஞ்ஞான கலை கூறும். ஆகவே நாம ரூபங்கள், உள்பொருள் ஆய மாயையினின்றும் தோன்றி, அம்மாயையிலேயே ஒடுங்கும் தன்மையன என்க. இம்முறையில் உலகு மாறுதல் அடையும் உள்பொருள் என்பதைச் சிவஞான முனிவர் திறம்படச் சிவஞான போத வாயிலாக விளக்கம் செய்கிறார்.

அறிவு ஒன்றே உள்பொருள் என்று கூறுவோர் மாயைக்குத் தனி இருப்புக் கூறுவது இல்லை. மாயைக்குத் தனி இருப்பு கூறின், இரு பொருள் உண்மைக்கு இடம் தருவது ஆகும் என்பது அன்னார் எண்ணம் போலும்! அவர், மாயை

*அறிவின் சாய(நிழ)லாகக் காணப்படும் பொய்த் தோற்றம் உடைய ஒன்று என்றும், அஃது உள்பொருள் அன்று என்றும் அநிர்வசனீயம் (சொல்ல ஒண்ணாதது) என்றும் சொல்வர். மாயை சடம் (Matter;) அறிவு இல்லாதது. அறிவு இல்லா ஒன்று அறிவு ஆகிய ஒன்றினின்றும் எங்ஙனம் தோன்றும்; இதைக் கடா (வினா) விடைகளான் சிவஞான முனிவர் தெளிவு செய்துள்ளதை ஆராய்ந்து பார்க்க.*

*உயிர் தனித்த பொருளா? அல்லது பூதங்களின் கூட்டுறவால் பிறப்பதா? என்னும் ஆராய்ச்சியும் உலகில் நிகழ்ந்து வருகிறது, உயிர் - சடமும் அல்லாததாய், முற்று அறிவு ஆகிய கடவுளும் அல்லாததாய், சடத்துடன் சேரும் போது சடம் போலவும், கடவுளுடன் சேரும்போது கடவுள் போலவும் நின்று, சார்ந்ததன் வண்ணமாய் இருப்பது என்று சிவஞான போதம் செப்புகிறது. இவ் உண்மையைச் சிவஞான முனிவர் தருக்க நியாய வாத முறையால் நன்கு நிறுவிக் கா(நிலை நா)ட்டி உள்ளார்.*

*மஞ்சளும் சுண்ணமும் சேர்ந்ததும் சிவப்பு நிறம் தோன்றுவது போலப் பூதங்களின் சேர்க்கையால் உயிர் தோன்றுகிறது என்று பூதவாதிகள் கூறுவது உண்டு. அவர் கூற்றைச் சிவஞான முனிவர் உடைத்து எறிகிறார். மஞ்சளும் சுண்ணமும் சேரும் போது சிவப்பு நிறம் பிறத்தல் உண்மை. சிவப்பு நிறம் யாண்டு இருந்து பிறக்கிறது? உள்ள ஒன்றினின்றும் பிறக்கிறதா? இல்லாத ஒன்றினின்றும் புதிதாகப் பிறக்கிறதா? எதுவும் உள்ள ஒன்றினின்றும் பிறப்பது இயற்கை. சிவப்பு நிறம் மஞ்சளிடத்தில் கர(மறை)ந்து இருந்தது. அது சுண்ணத்தின் கூட்டுறவு பெற்றதும் சிவப்பாக வெளியாயிற்று. இவ்வாறு பூதங்களினின்றும் உயிர் தோன்றியது எனில், அஃது எப்பூதத்தில் ஒடு(அட)ங்கி இருந்து தோன்றியது என்னும் கேள்வி எழும் அன்றோ? மஞ்சள் சடம்; அதனின்றும் வெளியான சிவப்பும் சடம். சடத்தினின்றும் சடம் பிறத்தல் இயல்பு. பூதம் சடம்; உயிர் சித் (அறிவு). சடத்தினின்றும் சித் எங்ஙனம் பிறக்கும்? நெல் கமு (பாக்)காக நீள்வது உண்டோ? இவ்வாறு சிவஞான முனிவர் தாம் கண்ட உண்மையை விளக்கி இருத்தல் உன்னற்பாலது.*

*ஒருவன் உயிரை ஆராயப் புகுந்தான். அவன், உயிர் என்பது தோலா? நரம்பா? எலும்பா? மூளையா? மனமா? கரணமா? (பொறி) எது? என்று ஆராய்ந்து ஆராய்ந்து ஒன்றும் இல்லை என்று முடிவுக்கு வந்தான் பாவம்! அவன் கூற்றைச் சிவஞான முனிவர் - ஓர் ஊருக்குச் சென்று நூற்றுவர். ஊர் சேர்ந்ததும் எல்லாரும் வந்தனரா என்று தெரிந்து கொள்ள ஒருவன் நூற்றுவரையும் எண்ணப் புகுந்து (தொடங்கி), அதில் தன்னை விடுத்து எண்ணி எண்ணி ஒருவனைக் காணோமே என்று வருந்திய சமயத்தில், ஓர் அறிஞர், 'எண்ணிய உன்னையும் சேர்த்து எண்ணிப்*

பார்க்க' என்று கூறியதும், நண்பரை எண்ணியவன் நாண் (வெட்கம்) உற்றான் என்னும் ஒரு சிறு கதையை எடுத்துக்காட்டி, உயிரை ஆராயப் புகுந்தவனுக்கு நல் அறிவுச் சுடர் கொளுத்துகிறார். உயிர், தோலா நரம்பா பிறவா என்று ஆராயப் புகுந்தவனை, அவன் தன் ஆராய்ச்சிக்குக் கருவியாக நின்று துணை செய்யும் ஒன்று எது என்று சிந்தித்துப் பார்க்குமாறு முனிவர் அவனை நோக்கி அறை கூறுகிறார்.

உயிர் பேரறிவின் கூறே அன்றித் தனித்த ஒன்று அன்று என்று வாதிப்போரும் உளர். உயிர் பேரறிவின் கூறு (பகுதி) ஆயின், அதற்கு இடையில் அஞ்ஞானம் எங்கிருந்து வந்தது என்னும் கேள்வி பிறவாமல் போகாது. இதற்கு, 'அஞ்ஞானம் பொருளாய் இருந்தால் அன்றோ அதற்குப் பற்றல் பற்றாமை கூறலாம். அது பொருள் அன்றே' என்னும் விடை அளிக்கப்படுகிறது. அஞ்ஞானம் இல்லை எனில் உயிர் எல்லாம் ஞான மயமாக அல்லவோ இருத்தல் வேண்டும்? விடுதலைக்கு உரிய முயற்சி எற்றுக்கு (எதற்கு)? அஞ்ஞானம் உள்பொருள் அன்று என்று கூறுவோரும் விடுதலைக்கு முயற்சி செய்யாமலா இருக்கிறார். இல்லை. மேலும் விவகாரத்தில் (நடைமுறை) அஞ்ஞானம் உண்டு என்றும், பாரமார்த்திக (உண்மை ஞான)த்தில் அஃது இல்லை என்றும் சொல்லப்படுகின்றன. பொய்யான - அதாவது இல்லாத - அஞ்ஞானம் விவகாரத்தில் மட்டும் எங்கிருந்து எப்படி நுழைந்தது? ஆகவே, உயிர் அஞ்ஞானம் உடையது என்பதையும், அஞ்ஞானம் இல்லாதது முற்றறிவு ஆகிய இறை ஒன்றே என்பதையும் சிவஞான முனிவர் விளக்கி இருத்தல் காண்க.

கடவுள் என்பது அறியாமை இல்லாதது; முற்றறிவாய் இருப்பது; உலகு உயிர்களில் நீக்கம் அற நினைந்து இருப்பது; அவைகளைக் கடந்தும் நிற்பது; போக்கு வரவு இல்லாது இருப்பது; எல்லாம் ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் நிலைக்களனாய் (தங்கும் இடம்) இருப்பது இன்னோர் அன்ன கடவுள் இயல்புகளை விளக்கி அக்கடவுள் ஒன்றே மகா சங்காரத்து (உலக அழிவு)க்கு உரியது என்று, சிவஞான சுவாமிகள் வேத வேதாந்தக் கலைகளைக் கொண்டும், யுக்தியைக் (நுட்ப அறிவு) கொண்டும், அநுபவத்தைக் கொண்டும் நிறுவி இருத்தலை ஆய்ந்து உண்மை உணர்க.

படைப்பைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. கடவுள் எல்லாம் வல்லவர் ஆகலின், அவர் வெறும் பாழினின்றும் உலகாதிகளைப் படைக்கிறார் என்று கூறுவோரும் உளர். சிவஞான போதம் கூறும் படைப்பு, தருக்க முறைக்கு மிகப் பொருந்தியதாய் இருக்கிறது. சிவஞான முனிவர் அதைத் தழுவிப் பல வழியிலும் அணி செய்துள்ளார்.

இவ் உலகில் இருளும் ஒளியும் உண்டு; நினைப்பும் மறப்பும் உண்டு; அறிவும்

அறியாமையும் உண்டு; இன்பு(பமு)ம் துன்பு(பமு)ம் உண்டு. இங்கு முழு ஒளியோ இருளோ - நினைப்போ மறப்போ - அறிவோ அறியாமையோ - இன்போ துன்போ இல்லை; ஒளியும் இருளும் பிறவும் விரவியே இருக்கின்றன; விரவி இருக்கும் நிலை கொண்டு, முழு ஒளி இருள் - நினைப்பு மறப்பு - அறிவு அறியாமை - இன்பு துன்பு - உடைய ஒரு நிலை உண்மையை அறிவால் அளந்து ஊகித்து உணரலாம். உயிர், முழு ஒளி - நினைப்பு - அறிவு - இன்பு - உள்ள இடத்தினின்றும் ஈண்டுப் போந்திருக்குமா அல்லது முழு இருள் - மறப்பு - அறியாமை - துன்பு - உள்ள இடத்தினின்றும் ஈண்டுப் போந்திருக்குமா என்பது ஆராயற்பாலது. வெயிலில் உள்ள ஒருவன் நிழலை நாடுதல் இயல்பு. ஆதலால் உயிர், முழு ஒளி - நினைப்பு - அறிவு - இன்பு - உள்ளடத்தினின்றும் ஈண்டுப் போந்து இராது. அது முழு இருள் - மறப்பு - அறியாமை துன்பு - சூழ்ந்த இடத்தினின்றுமே ஈண்டுப் போந்து இருத்தல் வேண்டும்.

“காரிட்ட ஆணவக் கருஅறையில் அறிவுஅற்ற
 கண்இலாக் குழவியைப் போல்
கட்டுண்டு இருந்த எமை வெளியில்விட்டு அல்லலாம்
 காப்பிட்டு அதற்கு இசைந்த
பேரிட்டு மெய்என்று பேசும் பாழ் பொய்உடல்
 பெலக்க வினை அமுதம் ஊட்டிப்
பெரிய புவனத்தினிடை போக்குவரவு உறுகின்ற
 பெரிய விளையாட்டு அமைத்திட்டு
ஏரிட்ட தன் சுருதி மொழி தப்பில் நமனை விட்டு
 இடர்உற ஒறுக்கி இடர்தீர்த்து
இரவுபகல் இல்லாத பேர்இன்ப வீட்டினில்
 இசைந்து துயில் கொள்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவுஆன எந்தையே
 சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
 சின்மயானந்த குருவே”

என வரூஉம் தாயுமானார் திருவாக்கை நோக்குக.

முழு இருளில் மூழ்கி உள்ள உயிர் அவ் இருளினின்றும் வெளிவர இயலாததாய் இருக்கிறது. அதன் கட்டை (தளை) அவிழ்க்க இறைவன் திருவருள் சுர (இடைவிடாது கொடு) க்கிறான். இறைவன் முற்றறிவு உடையவன்; ஆதலின் அவன்பால் இரக்கம் இயல்பாகவே அமைந்து இருக்கின்றது. அழுக்காறு

எழும்போது இரக்கம் ஒடுங்குதலையும் அழுக்காறு ஒடுங்கும்போது இரக்கம் எழுதலையும் அநுபவத்தால் உணர்கிறோம். அழுக்காறு, வன்கண் முதலியன அறியாமைக் கூறுகள். இரக்கம், ஒப்புரவு முதலியன அறிவுக் கூறுகள். இறைவன் முற்றறிவு உடையனாய் இருத்தலின், அவன் மாட்டு இரக்கம் இயல்பாகவே அமைந்து இருத்தலை விளக்க வேண்டுவது இல்லை. நீரின் தன்மை (குளிர்ச்சி) இருப்பது போலவும், நெருப்பில் வெம்மை (சூடு) இருப்பது போலவும் இறைவன் இடத்தில் இரக்கம் இயல்பாய் இருக்கிறது. இரக்கத்தின் தன்மை என்னை? துன்பம் கண்ட இடத்தில் அஃது எழுந்து துன்பத்தைப் போக்க முயல்வது அதன் தன்மை. உயிர், தன் நிலை அறியாது இருளில் மூழ்கிக் கிடக்கிறது. அதைக் காணும் இறைவனது இரக்கம் வாளாகிடக்குமோ? அவ் இரக்கம் உயிரைத் துன்பத்தினின்றும் விடுதலை செய்ய முனைகிறது. இறைவன் இரக்கத்தால் உயிரின் கட்டை அவிழ்த்து, அதைத் தன்னைப் போல் ஆக்கத் திருஉளம் கொள்கிறான். இறைவன் உயிரின் கட்டைப் படிப்படியாக அவிழ்க்க அதற்குப் பலதிற மாயா உடலம் அளிக்கிறான். உயிர் மாயா உடலம் பெற்றதும் சிறிது அறிவு விளங்கப் பெறுகிறது. மாயை உயிரின் அறியாமையை நீக்குதற்கு உரிய கருவி 'மாயா தனு விளக்கு' என்று சிவஞான சித்தி கூறுதல் காண்க.

தனு (உடல்) கரண (இந்திரியம்) புவன (உலகம்) போகங்கள் (இன்பம்) எல்லாம் மாயையின் காரியப்பாடேயாம். மாயா காரியம் ஆகிய தனு கரண புவன போகங்களை உயிருடன் இறைவன் சேர்ப்பதே படைப்பு என்பது. இப்படைப்பில் புதுமை ஒன்றும் இல்லை. உயிரும் உள்ளது; மாயையும் உள்ளது; கடவுளும் உள்ளது உயிர் அறியாமைக் கட்டில் இருப்பதால் அது தானே மாயையுடன் சேர்வது இல்லை. மாயை சடம் ஆதலின் அதுவும் தானே உயிருடன் புணர்வது இல்லை. இரண்டையும் சேர்க்க ஒரு பொருள் வேண்டப்படுகிறது. அஃது உயிரைப் போல அறியாமைக்கட்டு இல்லாததாய், மாயையைப் போலச் சடம் அல்லாததாய்; முற்றறிவு உடையதாய் இருத்தல் வேண்டும். இவ் இயல்பு உடைய ஒன்றே கடவுள் என்பது. உள்ள ஒன்றுடன் உள்ள ஒன்றைச் சேர்ப்பதே கடவுள் புரியும் படைப்புத் தொழில் என்க. இந்நுட்பத்தைச் சிவஞான முனிவர் விளக்கி உள்ள திறம் (இயல்பு) பாடியத்தில் திகழ்கிறது.

உயிர் தொடக்கத்தில் புல் கொடி செடி மரம் முதலிய உடலங்களைப் பெற்றும், பின்னே புழு மீன் ஆமை பறவை விலங்கு முதலிய உடலங்களைப் பெற்றும், இறுதியில் மக்கள் உடலைப் பெறுகிறது. மக்கள் பிறவியில் உயிர்க்குப் பகுத்தறிவு முகிழ்க்கிறது. பகுத்தறிவின் இயல்பு பிற உயிர்களைத் தன்னைப் போல் கருதுவது. இவ் இயல்பை மேலும் மேலும் பெருக்க உயிர் முயலுதல் வேண்டும். இம் முயற்சியில் தலைப்படாத உயிர் தெய்வ நிலை அடையாது.

*பகுத்தறிவு விளங்கியதும் உயிர், தன்னை இந்நிலைக்குக் கொணர்ந்த இறைவனிடம் நன்றி அறிதல் உடையதாய், அவனை நினைந்து நினைந்து உருகும் பயிற்சியில் நிலைத்து நிற்றல் வேண்டும். உருகும் உள்ளம் இறைவனுக்குக் கோயில் ஆதல் ஒரு தலை.* ***பகுத்தறிவு உடைய மக்களுக்கு இறைவழிபாடு இன்றியமையாது வேண்டற்பாலது.***

*“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண் நீறும்*
*இனித்தம் உடைய எடுத்த பொன் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே”*

*என்று அப்பர் அருளி இருத்தலை ஓர் (அறி)க. இறைவனது நன்றியை மறந்து, அவனை நினையாது வாழும் உயிரைத் தீவினை சூழ்ந்து உறுத்தும், அதனால் பிறவி வளரும். பிறவி இல்லாக் கடவுளை உன்ன (நினைக்க) உன்னப் பிறவிவேர் அறும்.*

*கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல்* (Evolution) *என்னும் நியாயம் பற்றி ஹெக்கல், டார்வின், கீத் முதலியோர் கூறியுள்ள உயிர் வளர்ச்சி சிவஞான போத உரைக்கண்ணும் ஒளிர்தல் கவனிக்கற்பாலது. உயிர், புழு, மீன், ஆமை, பன்றி, குரங்கு முதலிய உடலங்களைத் தாங்கிப் பின்னை மனித உடல் தாங்குவது என்பது சிவஞான போதத்துக்கு அரண் செய்யும் உண்மையே ஆகும்.*

*உயிர் சடத்தின் சார்பு கொள்ளக் கொள்ள அதன் அறிவு நன்கு விளங்கும் என்று விஞ்ஞான கலை கூறுகிறது. சிவஞானபோதம் என்ன சொல்கிறது? உயிர் மாயையின் கூட்டுறவு பெறப்பெறப் படிப்படியே அறியாமை நீங்கி அறிவு விளக்கம் பெறுகிறது என்று சொல்கிறது. இரண்டுக்கும் வேற்றுமை உளதோ? சிவஞான பாடியம், இந்நுட்பங்களை எல்லாம் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது.*

*உலகு - உயிர் - கடவுள் - உண்மை கூறும் சிவஞான போதம், அம் மூன்றும் தனித்தனியே நிற்கவில்லை என்றும், உலகு உயிருடன் கடவுள் நீக்கம் அற நிறைந்து நிற்கிறது என்றும் முழங்குகிறது. முப்பொருள் உண்மையை மறுத்துப் பொருள் ஒன்றே கூறுவோர், உலகு உயிருடன் கடவுள் நீக்கம் அற நிறைந்து இருத்தல் என்னும் கூற்றை ஏற்பது இல்லை. எங்கும் நிறைந்து உள்ள கடவுளில் உலகும் உயிரும் இடம் பெறின், கடவுளுக்குப் பரிபூரண (முத்தி) தோஷம் (இழுக்கு) உண்டாகும் என்று அவர் வாதிக்கிறார். அவ்வாதத்தைச் சிவஞான முனிவர் தடை விடைகளால் வீழ்த்தி, மெய்கண்டார் உள்ளக் கிடக்கையை உறுதிப்படுத்துவது கூர்ந்து சிந்திக்கத் தக்கது.*

இரண்டு பொருள் ஓர் இடத்தில் இடம் பெறா என்பது உண்மையே; எள் உள்ள இடத்தில் கொள் இருத்தல் முடியாது; அஃது உள்ள இடத்தில் இஃது இருத்தல் முடியாது. எள்ளும் கொள்ளும் எல்லை உடைய வடிவப் பொருள். எல்லை உடைய வடிவப் பொருள் ஒன்று உள்ள இடத்தில் மற்றொன்று இருக்க இடம் பெறுதல் அரிதே. கடவுள் எல்லை உடைய பொருள் அன்று. அஃது உருவம் அற்றது; எல்லை அற்றது; அகண்டமானது. அதைக் கண்ட (பகுதி)ப் பொருளாகக் கருதி இரண்டு பொருள் ஓர் இடத்தில் இடம் பெறா என்னும் நியாயத்தைக் குறிப்பது நியாயம் ஆகுமா? அவயவ (உடலின் உறுப்பு)ப் பொருளுக்கு ஏற்பட்ட நியாயத்தை நிரவயவப் பொருளுக்கு எடுத்துக் காட்டுதல் தருக்க முறை ஆகாது.

ஆகாயம் தனித்தும் மற்றப் பூதங்களில் நிறைந்தும் இருப்பது. அது மற்றப் பூதங்களில் பாய்ந்து இருப்பது உண்மை. காற்று உள்ள இடத்தில் ஆகாயம் இருக்கிறதா? இல்லையா? இங்கே இரண்டு பொருள் ஓர் இடத்தில் இடம் பெறா என்னும் நியாயத்தை எடுத்துக்காட்டுவது அறிவுடைமை ஆகும் கொல்! ஆகாயம் போன்றது கடவுள்; மற்ற பூதங்கள் போன்றவை உலகும் உயிரும். இவ்வாறு சிவஞான முனிவர் பாடியத்தில் எடுத்துக்காட்டி உள்ளதைத் தற்கால அறிவியல் நூல் வல்லார் நோக்குவாராக.

உலகு உயிருடன் கடவுள் நீக்கம் அறக் கலந்து உள்ள நிலையையே மெய்கண்டார் அத்துவிதம் என்கிறார். பொருள் ஒன்றே என்னும் கொள்கை உடையார், மெய்கண்டார் கருத்தை ஏற்பது இல்லை. அத்துவிதம் என்பதில் உள்ள அகரத்துக்கு அவர் அவர் கொள்கைக்கு இயைய அவர் அவர் பொருள் சொல்கிறார். மெய்கண்டார் சார்பினர் அகரத்துக்கு அன்மைப் பொருள் கூறுகிறார். ஏகான்மவாத சார்பினர் அகரத்துக்கு இன்மைப் பொருள் கூறுகிறார். மறுமை முதலிய வேறு பொருள் கூறுவோரும் உளர். அக்கடைகளை ஈண்டுத் திறக்கில் அணிந்துரை பெருகும்.

அகரத்துக்கு அன்மைப் பொருளும் உண்டு; இன்மைப் பொருளும் உண்டு. அமலம் அநேகம் என்னும் சொற்களை எடுத்துக் கொள்வோம். இரண்டிலும் அகரம் இருக்கிறது. அமலம் என்பதற்கு மலம் இல்லை என்பது பொருள். அநேகம் என்பதற்கு ஒன்று அல்ல பல என்பது பொருள். முதலில் உள்ள அகரம் இன்மைப் பொருளையும், இரண்டாவதில் உள்ள அகரம் அன்மைப் பொருளையும் தருகின்றன. அநேகம் என்பதில் உள்ள அகரத்துக்கு இன்மைப் பொருள் கூறின், அநேகம் என்பது பல என்னும் பொருள் இழந்து ஒன்றும் இல்லை என்னும் பொருள் உடையது ஆகும். அநேகம் என்பதற்குப் பொருள் ஒன்றும் இல்லை என்பதா? பல என்பதா? பல என்று எவரும் சொல்வர். இதனால் பெறுவது என்னை? எண்ணுப்

*பெயருடன் வரும் அகரம் அன்மைப் பொருளையே தரும் என்பது பெறுகிறோம். அத்துவிதம் என்பதில் உள்ள அகரம், துவிதம் என்னும் எண்ணுப் பெயரை ஒட்டி இருத்தலான் அகரத்துக்கு அன்மைப் பொருள் குறிப்பதே இலக்கண வரம்பும் (எல்லை) உலக வழக்கும் ஆகும். சிவஞான முனிவர் வியாகரணம் கொண்டு அத்துவித அகரத்துக்கு அன்மைப் பொருள் என்றே உறுதி செய்து உள்ளார்.*

*வேதத்தில் ஒன்றைக் குறிக்க ஏகம் என்னும் சொல்லும் இரண்டைக் குறிக்கத் துவிதம் என்னும் சொல்லும் போந்து இருக்கின்றன. சிவனும் சீவனும் ஒன்றாய் இருப்பின் ஏகம் என்றும் வெவ்வேறாய் இருப்பின் துவிதம் என்றும் சொல்லும் அளவில் வேதம் நின்றிருக்கும். வேதம் அத்துவிதம் என்று விளம்பி இருக்கிறது. ஆகவே, அத்துவிதத்துக்குப் பொருள்ஏகம் என்றோ துவிதம் என்றோ கோட(கொள்ளுத)ல் வேத விருத்தம் ஆகும். இதையும் சுவாமிகள் பாடியத்தில் தெள்ளத்தெளிய விளக்கி இருக்கிறார்.*

*'பொருள் ஒன்றே' என்று வேதம் கூறுவதற்குக் கடவுள் ஒன்றே என்று மெய்கண்டார் கொண்ட பொருளைச் சிவஞான முனிவர் தெளிவு செய்து உள்ளத்தை நோக்குழி (பார்த்தால்) முனிவரது வடமொழிப் புலமை நன்கு புலன் ஆகும். சிவ சூத்திரம் முதலிய பல வடமொழி நூல்களைச் சிவஞான முனிவர் பொருந்திய (தகுந்த) முறையில் ஆண்டிருத்தல் புலவர்கட்கு விருந்து ஆகும். சிவஞான பாடியத்தைப் பயில்வோர், வேத வேதாந்தம், ஆகமம், வேதாந்த சூத்திரம், சூத்திர பாடியங்கள் முதலியவற்றைப் பயிலாமலே, அவைகளைப் பயின்ற பயனைப் பெறுவர் என்பது திண்ணம்.*

*சிவஞானபாடியம் தத்துவ ஆராய்ச்சிக்கு ஒரு கருவூலம் போலத் துணைபுரியும்; தமிழ் பயில்வோர்க்கும் அவ்வாறே துணை செய்யும். சிவஞான பாடியம் தமிழ்ச் செல்வம்; கற்பகம்; காமதேனு. அது வேண்டுவதை உதவும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த திராவிட மாபாடியம் ஒவ்வொரு தமிழர் இடத்திலும் மிளிர்தல் வேண்டும் அன்றோ? தமிழ் வாழ்க; சிவநெறி வாழ்க; சிவஞான முனிவர் சேவடி வாழ்க.*

**- திரு. வி. கலியாணசுந்தரன்**

*இராயப்பேட்டை,*
*சென்னை.*
*24.03.1936*

# PREFACE

The Fourteen Siddhantha Shastras are the most authoritative works expounding the Saiva Siddhantha System of philosophy. They belong to the 12th, 13th, and 14th centuries of the Christian Era. The first of them, *Tiruvunthiyar* is a short and cryptic work of Tiruviyalur Uyyavanda deva Nayanar written in 1147 A.D. It is composed in a very attractive metre, which children employ while singing to the butterfly and contains several philosophic maxims in mystic language. The style reminds one of the prince of mystics St. Tirumoolar. The next work, *Tirukalittruppadiyar* is the work of Tirukadavoor Uyyavanda deva Nayanar, written in 1177 A.D. It is follows Tiruvunthiyar faithfully, and explains in a fuller measure, the aphorisms of the earlier work. These two works are in a way, the precursors of Meikanda Deva's classical and immortal work.

The most important of the fourteen group is undoubtedly Meikanda Deva's *Sivagnana Bodham.* The Life of Meikanda Deva and the origin of his work are too well known to need repetition. He belonged to the first half of the $13^{th}$ century A.D. In recent times, a good deal of research has been directed to the question, whether Meikanda Deva is an original author or a mere translator. The older orthodox view seems to be that he found the original in twelve sanskrit sutras of the Raurava Agama, while the modern view holds that there is considerable disparity between the sanskrit sutras and his own sutras and vital difference in many essential aspects. A decision on this question, acceptable to all parties, has yet to be made.

Meikanda Deva stands at the head of the *Santhana Parambarai.* His preceptor, St. Paranjothi is the last link in the Celestial Chain (called the Aghachandanam). Arulnandi Sivacharya, who is Meikanda's father's family preceptor, became the chief disciple of Meikanda Deva. His elaborate treatise, the *Sivagnana Siddhiyar* deals exhaustively with the tenets of other systems of philosophy, refutes the conclusions which they adumbrate, sets out in great detail the doctrines of the Saiva Siddhantha System, and takes care to answer all the criticisms which could possibly be levelled against them. It is thus a very valuable piece of polemical literature. Arulnandhi Sivacharya is also the author of the *Irupa Irupathu* which contains many eulogistic references to his master.

Among the forty-nine disciples of Meikanda Deva was one Manavachakam Kadanthar of Tiruvathikai, whose book called *Unmai Vilakkam* ranks as the sixth of the series. It is a manual which catalogues the tatwas, deals with the Panchakshara as embodied in the Nataraja idol, and the way to salvation.

Umapathy Sivacharya, one of the traditional - three - thousand - priests of the Chidambaram Temple is a prolific author who accounts for the remaining eight of the series. These eight go by the collective name of *Siddhantha Ashtakam.* Of these *Sivaprakasam* stands foremost, and *Tiruvarul Payan* and *Sankalpa Nirakaranam* come next; *Vinavenba, Pottrippahrodai, Kodikkavi, Nenjuvidhuthoothu, and Unmainerivilakkam* are the remaining five. These five are small pieces dealing with some special aspects of the system. There is a tradition about the occasion for singing

the Kodikkavi. The author gives the saka year for the composition of *Sankalpa Nirakaranam* as 1235 from which its date has been calculated as 1313 A.D.

Of these fourteen shastras, Sivagnana Bodham, Sivagnana Siddhiyar & Sivaprakasam are the three, mostly studied and referred to by other authors. They form a class by themselves and are respectively called the Primary, the Secondary, and the Derivative (*முதல் வழி, சார்பு நூல்கள்*) and it is for these three works that we find several commentaries. Of all the commentaries on the Sivagnana Bodham, the best is the Bashyam of Sivagnana Samigal. An unpublished commentary on the Sivagnana Siddhiyar called the "Gnanabharanavilakkam" by Sri-la-Sri Velliambalavana Munivar of the Dharmapuram Mutt is the most exhaustive treatise based on this work. The best commentary on the Sivaprakasam is that of Sivaprakasa Swamigal of Madura.

Let us now pass on to consider some of the eternal truths which the fourteen shastras teach us. From very ancient times, man has studied the environments around him, postulated the existence of God, listed His actions and attributes, discussed the relationship of the Universe unto himself, and prayed to God to bless him with eternal happiness. All men are not alike, so are their thoughts and conclusions. We therefore find considerable divergence of opinion on several of these fundamental matters. The fourteen shastras divide the Universe into three eternal categories Pati, Pasu and Pasa. They co-exist for all times. Of these Pati or God has two aspects, the transcendental and immanent.

He has eight attributes namely self control, purity, intuition, omniscience, freedom, grace, omnipotence and happiness. All these are perfect and absolute in Him. He is the Supreme Lord of the Universe and the Supreme Regulator of the destinies of the soul. He is the Supreme Director of the Panchakrityas or the five great cosmic actions (Creative Evolution, Protection, Transformative Extinction, Involution and Blissful Absorption). In all these actions He is indissolubly united to Shakti. He is the Efficient Cause, His Shakti is the Instrumental Cause, and Maya the Material Cause. This theory of causation is based on Sath-Karya-Vadha and differs from other theories like the Maya-vadha and the Ekatmavadha.

The soul is as perennial as God Himself. It has five stages of consciousness called the Jagratha, the Swapna. the Sushupti and the Turiya, and the Turiyatheetha. In these stages, it is related to the 96 tatwas in various groups. The soul is called Pasu because it is in immemoral bondage. Deliverance from this bondage is its salvation called Mukti. The bondage is the working of Pasa which is subdivided into Anava, Karma, and Maya. These are the three malas or impurities. Anavamala is the root cause of the soul's misery and is also called the Moola Mala. It may, in a way, be likened to the instinct of self-assertion found in the human and other species of creation. Maya is the great cosmic illusion and karma is the chain of action and reaction. Though all the three are bonds or bandhas, they differ among themselves in this way that Anava is Pratibandha (the Inimical Bond), Maya is Sambandha (the allied Bond), and Karma is Anubanda (the Appendix Bond). When these bonds fall off, the soul passes through three definite stages viz., Iruvinai-oppu

or Samatwa Buddhi, malaparibhaga and Saktini-padha, and becomes a Jeevanmukta. When the body falls off, the Jeevanmukta attains Sayujya.

There are four well defined processes by which the above results are achieved in easy grades. These processes are known as Charya, Kriya, Yoga and Gnana. Each of these has four sub-divisions bearing these very names. These sixteen grades, like the steps of a ladder, are discussed in detail and the benefits which the soul derives from them are clearly defined. The company of salved souls, the wills desires and actions of such souls, and the ways in which God bestows. His grace on them are all clearly set out. The essence of Panchakshara or the holy Five Letters, the methods of chantation and their effect on the soul and its encasement are all set out in great detail, in such a way, that it takes one's breath away.

The importance of a spiritual preceptor, the indispensable necessity of his initiation and upadesa, and the methods which he adopts are fully described and none is left in doubt as the futility of unaided self-endeavour.

These and hundreds of other matters are found in the Fourteen Shastras. They represent the cream of Tamilian thought and Tamilian self realisation. They are unique in several respects and go far beyond the limits which other well known systems have reached.

The Dharmapuram Adheenam deserves the grateful thanks of the saivite world for brining out this bare text edition of the *Fourteen Shastras* and for marking a very low price for the book in these troublous times of paper scarcity. The present head of the Mutt is doing his level best for the propagation of the Saiva-faith in all possible ways. The series of publications which has been the light of day, since the ascent of His Holiness **Sri-la-Sri Shunmuga Desiga Gnanasambanda Paramacharya Swamigal**, on the holy gadi of the Dharmapuram Adheenam Mutt, has served to dispel darkness in the minds of hundreds of saivites and has flooded them with the light of the Lord. The present publication will rank along with these and occupy a very prominent place.

May the authors of the Fouteen Shastras and the Lord whose grace they abound in, bless all the readers of this book and bestow on them the choicest favours. May peace prevail in every quarter of the Globe.

Om Shanti! Shanti!! Shanti!!!

**M. BALASUBRAHMANYA MUDALIAR**, B.A., B.L.,
Advocate & Honorary Secretary of
The Madras Saiva Siddhantha Mahasamajam.

Mylapore,
5-12-42.